வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk மலர் : 04 15.06.2023 வியாழக்கிழமை இதழ் : 188 பக்கங்கள் : 16

## சென்னையிலிருந்து காங்கேசன்துறைக்கு

# முதலாவது பயணிகள் கப்பல் நாளை மறுதினம் வருகின்றது

- என். குகராஜ் -

யாழ்ப்பாணம், ஜூன் 15

இந்தியாவிலிருந்து முதலாவது பயணிகள் கப்பல் நாளை மறுதினம் சனிக்கிழமை காங்கேசன்துறை துறைமுகத்தை வந்தடையும் என்று அறிய வருகின்றது.

இதேசமயம், புனரமைக்கப்பட்ட காங்கேசன்துறை துறைமுகம் நாளை மறுதினம் திறந்து வைக்கப்படவுள்ளது. இதற்காக யாழ்ப்பாணம் வரும் துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமால் சிறிபால டிசில்வா முதல் பயணிகள் கப்பலையும் வரவேற்பார் என்று அமைச்சு உயர்வட்டாரங்கள் தெரிவித்தன.

15

## 22 பவுண் நகைகள் நயினாதீவில் களவு

யாழ்ப்பாணம், ஜூன் 15

வீட்டின் கூரையை பிரித்து இறங்கிய திருடர்கள் 22 பவுண் நகைகளை திருடிச் சென்றுள்ளனர் என்று ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நயினாதீவு - 5ஆம் வட்டாரத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது.

சம்பவம் குறித்து மேலும் தெரிய வருபவை வருமாறு,

திருட்டுப் போன வீட்டில் இரு பெண்கள் மட்டுமே வசித்து வந்தனர். இரவுவேளை அவர்கள் உறங்கிக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி கூரை ஓட்டைப் பிரித்து இறங்கிய திருடர்கள் 22 பவுண் நகைகளை கைப்பையுடன் திருடிச் சென்றுள்ளனர்.

15

## சட்டவிரோத செயல்களை தடுக்க ஒத்துழையுங்கள்!

### புதிய மாவட்ட தளபதியிடம் கோரினார் யாழ். அரச அதிபர்



யாழ்ப்பாணம், ஜூன் 15

யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் குழு மோதல்கள், போதைப் பொருள் கடத்தல், கால் நடைகள் கடத்தல், மணல் கடத்தல் போன்ற சட்ட விரோத செயல்பாடு களை தடுப்பதற்கு இரா ணுவத்தினர் ஒத்துழைக்க வேண்டும் என்று அரச அதிபர் அ. சிவபாலசுந்தரன் யாழ். மாவட்ட படைகளின் தளபதியிடம் கேட்டுள்ளார்.

புதிதாக பதவியேற்ற யாழ். மாவட்ட படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் சுஜீவ

15

## 1,380 கோடி ரூபாய் பெறுமதியான

# அத்தியாவசிய மருந்துகளை வழங்குகின்றது அமெரிக்கா

கொழும்பு, ஜூன் 15

அமெரிக்காவின் சர்வதேச மருத்துவ உதவி திட்டத்தால் 4. 6 கோடி டொலர் - சுமார் 1,380 கோடி ரூபாய் பெறுமதியான அத்தியாவசிய மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன. இவை அடுத்த மாதமளவில் இலங்கைக்கு வழங்கப்படும் என்று இந்தத் திட்டத்தின் செயல்பாட்டு பணிப்பாளர் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவிடம் தெரிவித்துள்ளார்.

இந்த திட்டத்தின் மூலம், சமூகத்தில் பாதிக்கப்படக்கூடிய மக்களுக்கு மருத்துவ உதவிகளை வழங்குவதற்காக, அவசரகால மருந்துகள் மற்றும் பிற மருத்துவ

15

## நெதர்லாந்து நீரேரியில் மூழ்கி ஈழத் தமிழ் இளைஞர் மரணம்!

ஆம்ஸ்ரடாம், ஜூன் 15

நெதர்லாந்தில் நீரேரியில் நண்பர்களுடன் நீராடிய ஈழத் தமிழ் இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார். மற்றொருவர் மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஆம்ஸ்ரடாமில் வசித்து வரும் 21 வயதான அனுசன் அகிலன் என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்தார்.

கடந்த திங்கட்கிழமை இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நண்பர் ஒருவரின் பிறந்தநாளை கொண்டாடுவதற்காக இவர்கள் குழுவாக உத்ரெச் மாகாணத்தில் அமைந்துள்ள வின் கெவீன்ஸ் பிளென் ஏரிக்கு சென்றிருந்தனர். இரவு ஒன்பது மணியளவில் படகு சவாரியில் ஈடுபட்டிருந்த

15

## ஜனாதிபதி ரணிலுக்கு தொடர்ந்தும் ஆதரவு!

### பஸில் ராஜபக்ஷ உறுதி

கொழும்பு, ஜூன் 15

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நாட்டைக் கட்டியெழுப்பும் வேலைத் திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுக்க அரசாங்கத்தின் பிரதான கட்சியான பொதுஜன பெரமுன தொடர்ந்தும் ஆதரவு வழங்கும் என்று கட்சியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் அமைச்சருமான பசில் ராஜபக்ஷ ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முன்னிலையில் வலியுறுத்தியுள்ளார்.

நேற்று ஜனாதிபதி செயலகத்தில் அரசாங்க தரப்பு

15

## தீவிரமான பரிசீலனையின் பின்னரே வாகனங்கள் இறக்குமதி முடிவாகும்!

### நிதி இராஜாங்க அமைச்சர்

கொழும்பு, ஜூன் 15


வாகனங்கள் மீதான இறக்குமதி கட்டுப்பாடுகளை நீக்குவது குறித்து பல காரணிகளை கவனமாக பரிசீலித்த பின்னரே தீர்மானிக்க வேண்டும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இறக்குமதி கட்டுப்பாடுகள் தொடர்பாக தேசிய பொருளாதார மற்றும் பௌதிக திட்டங்கள் தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழுவின் சமீபத்திய கூட்டத்திலேயே அவர் மேற்படி கருத்தைத் தெரிவித்தார். பொருளாதாரத்தை

15

## 54 இலட்சம் ரூபாய்க்கு வியாஸ்காந்த் ஏலம்!

### யாழ்ப்பாணம் கிங்ஸ் எடுத்தது



யாழ்ப்பாணம், ஜூன் 15

யாழ்ப்பாணத்தை சேர்ந்தவரான வியாஸ்காந்தை 18 ஆயிரம் அமெரிக்க டொலர்களுக்கு - சுமார் 54 இலட்சம் ரூபாய்க்கு யாழ்ப்பாணம் கிங்ஸ் அணி ஏலத்தில் வாங்கியுள்ளது.

எல். பி. எல். என்று அறியப்பட்ட லங்கா பிறீமியர் லீக் இருபது -20 தொடருக்கான வீரர்கள் ஏலம் நேற்று கொழும்பில் நடந்தது. சுமார் 360 வீரர்கள் இந்த ஏலத்தில் பங்கேற்றனர்.

15

## ஐ. தே. க. தலைமையில் புதிய தேர்தல் கூட்டணி!

### ருவான் விஜயவர்த்தன

கொழும்பு, ஜூன் 15

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான கூட்டணி அடுத்த தேர்தலில் போட்டியிடும் என்று அந்தக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை ஆளும் பொதுஜன பெரமுன கட்சியினரை ஜனாதிபதி சந்தித்தார். இந்த சந்திப்பில் பெரும் குழப்பங்கள் ஏற்பட்டன. பெரமுனவின் அமைப்பாளர்கள் பங்கேற்கவில்லை என்று தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்தநிலையில் ருவான் விஜயவர்த்தன கூறுகையில்,

ஜனாதிபதிக்கான ஆதரவு

15

## படலை விழுந்து குழந்தை மரணம்

முல்லைத்தீவு, ஜூன் 15

விளையாடிக் கொண்டிருந்த குழந்தை மீது இரும்புப் படலை வீழ்ந்தில் குழந்தை ஒன்று பலியானது.

நேற்று காலை முல்லைத்தீவு - கேப்பாபிலவு பகுதியில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் அதே இடத்தை சேர்ந்த ஆதவன் லிதுசிகன் (வயது 3) என்ற குழந்தையே உயிரிழந்தது.

முல்லைத்தீவு

15

## ஜனாதிபதியின் அழுத்தத்தாலேயே தொல்பொருள் பணிப்பாளர் விலகல்

### அக்மீமன தயாரத்ன தேரர்

கொழும்பு, ஜூன் 15

ஜனாதிபதியின் அழுத்தத்தாலேயே தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் அநுர மானதுங்க இராஜினாமா செய்ததாக அக்மீமன தயாரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், குருந்தூர் விகாரையின் சொத்துகளை பொறுப்பின்றி கையளிப்பதன் மூலம் எதிர்காலத்தில் இரத்தக் களரி ஏற்படலாம் என்று கொழும்பில் அவர் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

அந்த சந்திப்பில் மேலும் அவர் கூறியவை வருமாறு,

தொல்பொருள் சொத்துகளை அந்நியப்படுத்தும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லை. ஏனெனில், அவர் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியல்ல.

ரணில் விக்கிரமசிங்க இந்நாட்டின் ஜனாதிபதியாக இருந்தாலும் அவர் விரும்பிய வாறு புராதன

15

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# அமைச்சர் விதுரவை ஜனாதிபதி உடனே பதவி விலக்கவேண்டும்!

## சுமந்திரன் எம். பி. வலியுறுத்து



**யாழ்ப்பாணம், ஜுன் 15**

**அமைச்சர் விதுர விக்ரமநாயக்க, வடக்கு-கிழக்குக்கு பாரிய இராணுவப் பட்டாளங்களோடு சென்று வருகிறார். அவருடைய பணிப்புரையின் கீழ்தான் சட்டவிரோத காணி அபகரிப்புகள் இடம்பெற்று வருகின்றன. அதனால் விதுர விக்ரமநாயக்கவை ஜனாதிபதி பதவி விலக்கவேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.**

சாவகச்சேரியில் அமைந்துள்ள தமிழரசு கட்சி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த சில தினங்களாக தொல்லியல் திணைக்களப் பணிப்பாளர் பேராசிரியர் மானதுங்க ராஜினாமா செய்தமை தொடர்பாக வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்று வருகின்றன.

ஜனாதிபதி எங்களோடு நடத்திய பேச்சு வார்த்தையிலும் கூட, அமைச்சரவை தீர்மானங்களை நிறைவேற்றுவதில் விருப்பம் இல்லாதவர்போல பேராசிரியர் மானதுங்க காட்டிக்கொண்டார்.

அது அமைச்சரவைக்கும் அவருக்குமுள்ள பிரச்னை. எங்களுக்குள்ள பிரச்னை, வடக்கு-கிழக்கு வாழ் மக்களின் நிலங்கள் அபகரிப்பு பற்றியது.

அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, வடக்கு-கிழக்குக்கு பாரிய இராணுவப் பட்டாளங்களோடு சென்று வருகிறார்.

அவருடைய பணிப்புரையின் கீழ்தான் சட்டவிரோத காணி அபகரிப்புகள் இடம் பெற்றுவருகிறன. அதனால் ஜனாதிபதியிடம் நாங்கள் கேட்பது விதுர விக்ரமநாயக்கவை பதவி விலக்க வேண்டும்-என்றார். (அ)

# யாழ்ப்பாணம் மாநகர சபையின் நடமாடும் சேவை நாளை மறுதினம்!

யாழ்ப்பாணம், ஜுன் 15

யாழ். மாநகர வரியிறுப்பாளர்களின் நன்மை கருதி நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை நடமாடும் சேவை நீராவியடி - இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில், வட்டாரம் 08, 09ஆம் வட்டாரங்களுக்கான ஆதன வரி அறிவித்தல் படிவம் - சோலை வரி வழங்கல், பெயர் மாற்ற விண்ணப்ப படிவம் வழங்கல், சைக்கிள் உரிமம் வழங்கல் போன்ற சேவைகள் வழங்கப்படவுள்ளன என்று யாழ். மாநகர ஆணையாளர் அறிவித்துள்ளார்.

"பொது மக்களால் இது வரை காலமும் செலுத்தாதுள்ள ஆதனவரி நிலுவைகள் மற்றும் நடப்பாண்டு ஆதனவரி போன்றவற்றை பெற்று யாழ். மாநகர சபையின் அபிவிருத்தி நடவடிக்கைகளை துரிதப்படுத்த திட்டமிட்டுள்ளோம். அத்துடன், நடப்பாண்டின் ஆதன வரியை முழுமையாக செலுத்தும் பட்சத்தில் மூன்றாம், நான்காம் காலாண்டுக்கான ஆதனவரியில் 5 வீதத்தை கழிவாகப் பெற்றுக் கொள்ளலாம்", - என்றும் ஆணையாளர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# காதல் விவகாரத்தில் முரண்பாடு பெண் கழுத்தறுத்துக் கொலை!

கொழும்பு, ஜுன் 15

பாடசாலையின் அபிவிருத்தி உத்தியோகத்தரான பெண்ணை இளைஞர் ஒருவர் கழுத்தை அறுத்து கொலை செய்துள்ளார்.

மாத்தறை - ஊருபொக்க என்ற இடத்திலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் பாடசாலை முடிவடைந்த பின்னர் அபிவிருத்தி உத்தியோகத்தரான பெண் வீடு திரும்பிக் கொண்டிருந்தார். அந்தச் சமயமே அதே கிராமத்தை சேர்ந்த இளைஞர் அந்தப் பெண்ணின் கழுத்தை அறுத்தும், மார்பில் கத்தியால் குத்தியும் கொன்றார்.

இந்த சம்பவத்தில் சிதாரி மதுமாலி என்ற 29 வயதுடைய யுவதியே உயிரிழந்தார்.

பாடசாலையிலிருந்து பஸ்ஸில் வந்த அவர், வீட்டுக்கு நடந்து சென்று கொண்டிருந்த போதே இந்தக் கொலையை இளைஞர் செய்துள்ளார்.

அந்தப் பகுதியில் இருந்தவர்கள் பெண்ணை உடனடியாக மீட்டு மருத்துவமனையில் சேர்த்தபோதும் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இருவருக்கும் இடையே காதல் தொடர்பு இருந்ததாகவும் இது தொடர்பான முரண்பாட்டிலேயே இந்தக் கொலை இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# சிறை கலவரத்தில் ஈடுபட்டோரை கைது செய்ய நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, ஜுன் 15

மஹர சிறைச்சாலையில் 2020ஆம் ஆண்டு இடம்பெற்ற கலவரத்தில் ஈடுபட்டவர்களை கைதுசெய்ய உத்தரவிடுமாறு கோரி மேன்முறையீட்டு நீதிமன்றில் எழுத்தாணை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தின்போது உயிரிழந்த கைதி ஒருவரின் மனைவியால் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட அனைத்து சந்தேக நபர்களையும் கைது செய்யுமாறு பொலிஸ்மா அதிபருக்கும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கும் உத்தரவிடுமாறு கோரப்பட்டிருந்தது.

கைதிகளின் மரணம் தொடர்பில் விரிவான விசாரணைகளை மேற்கொண்ட வெலிசறை நீதிவான், இச்சம்பவத்தோடு தொடர்புடையவர்களை உடனடியாக கைது செய்யுமாறு கோரியிருந்த நிலையில், குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைதுசெய்து சுமார் இரண்டு மாதங்கள் கடந்துள்ள போதிலும், இதுவரையில் கைதுசெய்யப்படவில்லை என மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ)

# வடமராட்சிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டம் ஞாயிறு ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஜுன் 15

வடமராட்சி கிண்ணத்துக்கான யாழ். மாவட்ட ரீதியிலான அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான மாபெரும் உதைபந்தாட்ட சுற்று போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாக வுள்ளது.

வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வடமராட்சியின் முன்னாள் விளையாட்டு வீரர்கள் - ஆர்வலர்களின் அனுசரணையுடன் கொலின்ஸ் விளையாட்டுக்கழகம் இந்தத் தொடரை நடத்துகிறது.

வடமராட்சிப் பிரதேசத்தின் விளையாட்டுத்துறை முன்னேற்றத்திற்காகவும் எங்களில் பலருடன் விளையாடி எமது மண்ணுக்கு பெருமைசேர்த்து எம்மை விட்டுப் பிரிந்துசென்ற வடமராட்சியின் முன்னாள் விளையாட்டு வீரர்கள், பயிற்றுநர்கள், ஆர்வலர்களை நினைவுகூரும் முகமாகவும் இப்போட்டியானது ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக இப்போட்டியை ஒழுங்கமைத்து அனுசரணை வழங்கும் வடமராட்சியின் முன்னாள் விளையாட்டு வீரர்கள் மற்றும் ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், எதிர்காலத்தில் இந்தப் பிரதேசத்தில் உள்ள திறமையான வீரர்களை இனங்கண்டு அவர்களின் திறமைகளை மேம்படுத்தும் செயல்திட்டங்களை முன்னெடுப்பதற்கான ஓர் ஆரம்ப நடவடிக்கையாகவும் இந்தச் செயல்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

குறிப்பாக சிறந்த பயிற்றுநர்கள் ஊடான பயிற்சிகள் மற்றும் அவர்களின் விளையாட்டு உபகரணங்களுக்கான அனுசரணைகள் உள்ளிட்ட பல்வேறு வகையான ஆதரவை வழங்குவதற்கும் இப்போட்டிகளின் அனுசரணையாளர்கள் தீர்மானித்துள்ளனர்.

உலகெங்கும் பரந்து வாழும் வடமராட்சியைச் சேர்ந்த முன்னாள் விளையாட்டு வீரர்கள் மற்றும் ஆர்வலர்கள் அனுசரணையுடன் "விளையாட்டால் ஒன்றிணைவோம் - விளையாட்டை முன்னேற்றுவோம் -நன்றி மறவாதிருப்போம்" என்ற தொனிப்பொருளுடன் முன்னெடுக்கப்படும் இச்செயல் திட்டம் முழுக்க முழுக்க விளையாட்டுத் துறையின் அபிவிருத்தி மற்றும் வீரர்களினதும் துறைசார் நிபுணர்களதும் திறன் மேம்பாட்டையும் இலக்காகக் கொண்டுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ-2)

# அமரர் சிவசிதம்பரம் நினைவாக சைக்கிளோட்ட, மரதன் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜுன் 15

தமிழர் விடுதலை கூட்டணியின் முன்னாள் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மு. சிவசிதம்பரத்தின் 100ஆவது பிறந்ததினத்தை முன்னிட்டு சைக்கிள் ஓட்டம், அரை மரதன் (22 கி. மீ.) ஓட்டப் போட்டிகள் நடைபெற வுள்ளன.

இந்தப் போட்டிகள் நாளை மறுதினம் சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் காலை 6 மணிக்கு கரவெட்டி - சாமியன் - அரசடி சந்தியில் ஆரம்பமாகவுள்ளன.

இந்தப் போட்டிகளில் வெற்றிபெறுவோருக்கு முதல் பரிசாக 20 ஆயிரம் ரூபாயும் இரண்டாம் பரிசாக 15 ஆயிரம் ரூபாயும் மூன்றாம் பரிசாக 10 ஆயிரம் ரூபாயும் வழங்கப்பட வுள்ளன.

மேலதிக தகவல்கள் தேவைப்படுவோர் 077 870 2089/ 077 349 8141 என்ற கைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியும். (ஐ-2)

# 'பாலேந்திரா நேர்காணல்கள்' நூல் வெளியீடு யாழ். நகரில்!

யாழ்ப்பாணம், ஜுன் 15

ஈழத்து நாடகத் துறையில் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ந்து இயங்கி வரும் பாலேந்திராவின் நேர் காணல்கள் தொகுப்பு நூல் வெளியீடும் அறிமுகமும் யாழ்ப்பாணத்தில் நடைபெற வுள்ளது.

இந்த நிகழ்வு நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 3.30 மணியில் இருந்து 5. 30மணி வரை யாழ். திருமறைக் கலாமன்ற கலைத்தூது கலையகத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வுக்காக லண்டனில் இருந்து பாலேந்திரா, ஆனந்தராணி ஆகியோர் யாழ். நகர் வந்து சிறப்பு நிகழ்வாக "அரங்க நினைவலைகள்" நிகழ்வை வழங்கவுள்ளனர்.

அத்துடன் அண்மையில் கொழும்பு நகரிலும் கனடாவிலும் வெளியிடப்பட்ட "பாலேந்திராவின் அரங்கக் கட்டுரைகள்"

நூலும் அறிமுகம் செய்யப் படும்.

சோ.தேவராஜா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பா. இரகுவரன், நா. நவராஜ், ஜோன்ஸ்சன் ராஜ்குமார் ஆகியோர் உரையாற்றுவார்கள்.

"பாலேந்திரா நேர் காணல்கள்" இலங்கை, இந்தியா, இங்கிலாந்து, கனடா, பிரான்ஸ், சுவிற்சர்லாந்து ஆகிய நாடுகளில் எழுத்து ஊடகங்களுக்காக எடுக்கப்பட்ட நேர்காணல்கள் இடம்பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தோல் புற்றுநோய் தாக்கம் 'கிறீம்'களே காரணம்!

கொழும்பு, ஜுன் 15

நாட்டில் மக்கள் மத்தியில் தோல் புற்றுநோயின் தாக்கம் அதிகரித்துள்ளதாக சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது.

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட தோல் நோய் மருத்துவ நிபுணர் சிறீ யானி சமரவீர, இயற்கையான சருமத்தை பாதுகாத்து ஆரோக்கியமாக வைத்திருப்பது மிகவும் அவசியமானது எனத் தெரிவித்தார்.

மேலும், சில பெண்கள் சரியான விளக்கமின்றி சருமத்தை வெண்மையாக்கும் கிறீம்களை பயன்படுத்துவதுகூட புற்றுநோயின் தாக்கத்துக்கு காரணமாக அமையலாம் எனவும் அவர் கூறியுள்ளார். (ஐ)

ஈழநாடு
Eelanadu
15.06.2023 வியாழக்கிழமை
சோபகிருது வருடம், வைகாசி 32

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழ் மக்கள் ஆதரித்த சரத் பொன்சேகா?

தேர்தலில் வாக்களிக்கும்போது அரசியல்வாதிகள் என்ன சொல்கிறார்கள் என்பதற்கு அப்பால் மக்கள் சிந்திக்க வேண்டும். இதற்கு ‘பீல்ட் மார்ஷல்’ சரத் பொன்சேகா ஒரு சிறந்த உதாரணம். 2010 ஜனாதிபதி தேர்தலில் சரத் பொன்சேகாவுக்கு ஆதரவளிக்குமாறு சம்பந்தன் தமிழ் மக்களை கோரினார். சரத் பொன்சேகாவுக்கு ஆதரவாக சம்பந்தனும் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளும் மேடையேறின. யுத்தம் முடிவுற்று ஒரு வருடமே ஆகியிருந்த நிலையில் யுத்தத்துக்கு தலைமை தாங்கிய தளபதியான சரத் பொன்சேகாவை ஆதரிக்குமாறு தமிழ் மக்கள் கோரப்பட்டனர். சரத் பொன்சேகாவின் யுத்த பங்களிப்பு கோட்டாபயவின் பங்களிப்பை விடவும் கூடுதலானது. உண்மையில், அந்தத் தேர்தலில் சரத் பொன்சேகா வெற்றி பெறுவதற்கான சூழல் இருந்திருக்கவில்லை. ஆனாலும், தமிழ் மக்கள் ஆதரவளிக்குமாறு கோரப்பட்டனர். யுத்த வெற்றியைப் பங்குபோடுவதற்காக நடைபெற்ற தேர்தலில் ஒரு யுத்த வெற்றியாளரை வெற்றிபெறச் செய்யும் நோக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் வாக்குகள் பயன்படுத்தப்பட்டன.

மகிந்த ராஜபக்ஷவை தோற்கடிப்பதற்கான வியூகத்துக்கு தமிழ் மக்களின் வாக்குகள் பயன்படுத்தப்பட்டன. இதேபோன்று, 2015இல் மகிந்த ராஜபக்ஷவை தோற்கடிப்பதற்கான வியூகத்துக்கும் தமிழ் மக்களின் வாக்குகள் பயன்படுத்தப்பட்டன. இதனால் தமிழ் மக்களின் வாக்குகளுக்கு வியூக முக்கியத்துவம் இருப்பதான ஒரு கற்பனையும் தமிழர் பக்கத்தில் செய்யப்பட்டது. ஆனால், உண்மை வேறு. அதாவது, மேற்படி இரண்டு சந்தர்ப்பங்களிலும் தமிழ் மக்கள் பயன்படுத்தப்பட்டனரே தவிர, அவர்கள் எந்த நன்மையையும் அடையவில்லை. சம்பந்தன் வேண்டுமானால் நன்மை அடைந்திருக்கலாம் - ஏனெனில், அமிர்தலிங்கத்துக்கு பின்னர் எதிர்கட்சி தலைவராக இருந்தவர் என்னும் வரலாறை சம்பந்தன் ஏற்படுத்திக் கொண்டார். இதன்மூலம் தனது நீண்டநாள் ஆசையை சம்பந்தன் பூர்த்தி செய்துகொண்டார். ஆனால், தமிழ் மக்களின் நிலை?

ஆனால், தமிழ் மக்களோ தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டுக் கொண்டே இருக்கின்றனர். ஜனாதிபதி தேர்தலின்போது கட்சிகளின் கதையை விடுத்து மக்கள் தங்களின் சொந்த புத்திக்கு முதன்மையளிக்க வேண்டும். ஏனெனில், அரசியல்வாதிகளின் கதைகளை நம்பி வாக்களித்த மக்கள் இதுவரை ஏமாந்ததே வரலாறு. முள்ளிவாய்க்காலில் முடிவுற்ற யுத்தத்துக்கு தலைமை தாங்கிய இராணுவத் தளபதியை தமிழ் மக்கள் ஆதரிக்குமாறு அறிவுறுத்தப்பட்டனர். ஆனால், இன்று தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்ற சரத் பொன்சேகாவோ வடக்கு - கிழக்கில் இராணுவத்தின் கட்டுப்பாட்டிலிருக்கும் தமிழ் மக்களின் நிலங்களை விடுவிக்கக்கூடாதென்று கூறுகின்றார். இந்த இடத்தில் சரத் பொன்சேகாவுக்கு வாக்களிக்குமாறு கூறிய சம்பந்தனின் பதில் என்ன?

இன்று முள்ளிவாய்க்காலில் நடைபெற்றது இனப்படுகொலையென்று ஒரு சாரார் கூறிவருகின்றனர். கூட்டமைப்பின் மற்றும் தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களும் அவ்வாறு கூறுகின்றனர். தங்களின் தொகுதிகளில் வாக்குகளை பாதுகாப்பதற்காக விரும்பியோ, விரும்பாமலோ சிலர் இனப்படுகொலையை உச்சரிக்கின்றனர். ஆனால், அவர்களில் பலர் சரத் பொன்சேகாவுக்கு ஆதரவாக வாக்களிக்குமாறு கோரியவர்கள். ஆனால், இன்று பொன்சேகா அதனை ஓர் அரசியல் ஆயுதமாக பாவிக்கின்றார். இனப்படுகொலை நிலைப்பாட்டை தமிழ் மக்கள் ஆதரித்திருந்தால் எனக்கு வாக்களித்திருக்க மாட்டார்கள் - என்று கூறுகின்றார். ஆதரிக்கக்கூறியவர்கள் வாயடைத்துப் போயிருக்கின்றனர்.

2009இற்கு பின்னர் நடைபெற்ற மூன்று ஜனாதிபதி தேர்தல்களின் போதும் தமிழ் மக்கள் அரசியல்வாதிகளின் - குறிப்பாக சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் (இப்போதிருக்கும் கூட்டமைப்பு அல்ல) அறிவுறுத்தலுக்கு அமைவாகவே வாக்களித்தனர். ஆனால், தமிழ் மக்களின் வாக்குகளை பெற்றவர்கள் அதற்கு நன்றியுள்ளவர்களாக நடந்துகொள்ளவில்லை. இந்த நிலையில் எதிர்வரும் தேர்தலின்போது மக்கள் சொந்தமாக முடிவெடுக்க முயற்சிப்பதே - இதுவரையான அணுகுமுறையில் அடைந்த தோல்விக்கான பதிலாக அமையும்.

# தமிழ் மக்களின் 250 ஏக்கர் காணி சிங்கள மக்களால் அபகரிப்பு!

## வெளிப்படுத்தினார் சார்ள்ஸ் எம். பி.

*வவுனியா, ஜூன் 15*

*வவுனியா - வீரபுரம் பகுதியில் தமிழ் மக்களுக்கு வழங்கப்படவேண்டிய 250 ஏக்கர் காணி சிங்கள மக்களால் அபகரிக்கப்பட்டதாக பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.*

*வவுனியா ஒருங்கிணைப்பு குழு கூட்டம், நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதன்போதே குறித்த குற்றச்சாட்டை அவர் முன்வைத்திருந்தார். இது தொடர்பாக மேலும் கருத்து தெரிவித்த அவர்,*

*“1994ஆம் ஆண்டு செட்டிக்குளம் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட வீரபுரம் மக்களுக்காக 400 ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டு, வாழ்வாதாரத்துக்காக ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஓர் ஏக்கர் வழங்குவதாக கூறி குடியமர்த்தப்பட்டார்கள். ஆனால், தற்போது வரை அந்த மக்களுக்கு காணிகள் வழங்கப்படவில்லை.*

*ஆனால், ஒதுக்கப்பட்ட காணிகளில் 75 சதவீதமான காணிகள், வவுனியா தெற்கு சிங்கள பிரதேச செயலகத்தை சேர்ந்த பெரும்பான்மையின சிங்கள மக்கள் அபகரித்திருக்கின்றார்கள். இதேவேளை, எமது மதுராக நகரை சேர்ந்த பொது மக்கள் தெற்கு சிங்கள பிரிவுக்குள் சென்று குடியேறுவதற்காக சிறு துண்டு காணியை கேட்டபோது, அதற்கு அந்தப் பகுதியில் உள்ள பௌத்த மதகுரு சம்மதித்தால்தான் இவர்கள் தமது பிரிவுக்குள் வரமுடியும் என்று மாவட்ட செயலக மட்டத்தில் அன்று எனக்கு பதில் வழங்கப்பட் டது.*

*ஆனால், தற்போது 250 ஏக்கருக்கும் மேற்பட்ட காணிகளை தெற்கில் இருக்கும் மக்கள் அபகரித்திருக்கின்றார்கள். எனவே, வீரபுரம் மக்களுக்கு அந்த காணிகள் வழங்கப்பட வேண்டும்”, என்றார். (ஐ)*

# யாழில் பாடசாலை மாணவிக்கு பாலியல் தொல்லை கொடுத்த ஆசிரியர் கைது

*யாழ்ப்பாணம், ஜூன் 15*

*யாழ். தீவகத்திலுள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் மாணவிக்கு பாலியல் தொல்லை கொடுத்தார் என்ற குற்றச்சாட்டில் 42 வயதான ஆசிரியர் ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.*

*தரம் 7 இல் கல்வி கற்கும் 12 வயதான மாணவிக்கே ஆசிரியர் இவ்வாறு பாலியல் தொல்லை கொடுத்தார் என குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.*

*இது தொடர்பில் மாணவி தன் தாயாரிடம் முறையிட்டுள்ளார். பாடசாலை அதிபரிடம் முறையிடப்பட்ட போது உரிய நடவடிக்கை எடுக்காததையடுத்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.*

*குறித்த ஆசிரியர் கடந்த திங்கட்கிழமை கைது செய்யப்பட்டு, செவ்வாய்க்கிழமை ஊர்காவல்துறை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார். அவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது.*

*கைதான ஆசிரியர் ஏற்கனவே வலிகாமத்தில் பாடசாலை ஒன்றில் கல்வி ஆசிரியராக கடமையாற்றும்போது சில மாணவிகளை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.*

*எனினும், பாதிக்கப்பட்ட மாணவிகள் நீதிமன்றத்தில் சாட்சியமளிக்க முன்வராததை அடுத்து அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு அவர் மீளவும் ஆசிரியர் சேவையில் இணைக்கப்பட்டிருந்தார். (ஐ)*

# டெங்கு நோயால் இருவர் உயிரிழப்பு

*கொழும்பு, ஜூன் 15*

*டெங்கு நோயின் தாக்கம் குறித்து மருத்துவ நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ள நிலையில் இலங்கையில் டெங்கு தொடர்பான மரணங்கள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன.*

*அதன்படி, மேலும் இரு டெங்கு இறப்புகள் பதிவாகியுள்ளதால் பலி எண்ணிக்கை 27ஆக உயர்ந்துள்ளது.*

*தொற்றுநோயியல் பிரிவின் படி, 2023 ஆம் ஆண்டில் 44 ஆயிரத்து 38 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். இதில், அதிகபட்சமாக கம்பஹா மாவட்டத்தில் 9 ஆயிரத்து 638 நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். (ஐ)*

# விவசாயிகளுக்கு நட்டஈடு ரூ. 7 கோடி ஒதுக்கீடு

*கொழும்பு, ஜூன் 15*

*சிறுபோகத்தில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க 7 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.*

*2022ஆம் ஆண்டு சிறுபோகத்தில் பாதிப்பை எதிர்கொண்ட 3,499 விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கப்படவுள்ளது.*

*இந்த இழப்பீட்டை காப்புறுதி சபை வழங்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிலரின் விமர்சனங்களுக்கும் கேலிப் பேச்சிற்கும் ஆளாவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களை பகைத்துக் கொள்ளாதீர்கள். நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும்.

**இடபம்**
விலை உயர்ந்தப் பொருட்களை கவனமாக கையாளுங்கள். கணவன் - மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். அதிகாரிகளிடம் விவாதம் வரக்கூடும். அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

**மிதுனம்**
பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். பழைய பிரச்னைகளுக்கு தீர்வு காண்பீர்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். உத்தி யோகத்தில் முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.

**கடகம்**
உறவினர், நண்பர்கள் உங்களுக்கு ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். புது வாய்ப்புகள் தேடி வரும். அந்தஸ்து உயரும் நாள்.

**சிம்மம்**
கணவன் - மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். பாதியில் நின்ற வேலைகள் முடியும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

**கன்னி**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலேயே ஒருவித படபடப்பு தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். உத்தியோகத்தில் அதிகாரிகளிடம் பனிப்போர் வந்து நீங்கும். கவனம் தேவைப்படும்.

**துலாம்**
மனைவி வழியில் அனுகூலம் உண்டு. நட்பால் உற்சாகமடைவீர்கள். தாவாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உதவுவார்கள். எதிர்பாராத நன்மைகள் உண்டாகும்.

**விருட்சிகம்**
விஐபிகள் அறிமுகமாவார்கள். வியாபாரத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் அதிசயிக்கும் படி நடந்துக் கொள்வீர்கள். நினைத்தது நிறைவேறும்.

**தனுசு**
நட்பு வட்டம் விரியும். மனைவி வழியில் ஆதாயம் பெறுவீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். புதுமை படைக்கும் நாள்.

**மகரம்**
பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டு. தாய்வழி உறவினர்களால் வீண் செல வுகள் ஏற்படும். சக ஊழியர்களால் நிம்மதி கிடைக்கும். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தினரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்களை தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள்.

**மீனம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். பழைய பிரச்னைகள் தீரும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். அதிகாரிகள் கொடுத்த பணிகளை விரைந்து முடிப்பீர்கள். புதிய பாதை தெரியும்.

# அமைச்சர் செந்தில் பாலாஜி நேற்று கைது செய்யப்பட்டார்!

*கரூர், ஜூன் 15*

*மின்சார துறை அமைச்சர் செந்தில்பாலாஜி கைது செய்யப்பட்டுள்ள நிலையில் கரூரில் பல்வேறு இடங்களில் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.*

*கரூரில் மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் செந்தில்பாலாஜி வீடு, அவரின் சகோதரர் அசோக்குமார் வீடு மற்றும் நண்பர்கள் வீடு என 10 இடங்களில் நேற்றுமுன்தினம் காலை 8 மணி அளவில் வருவாய் துறை அதிகாரிகள் சோதனையைத் தொடங்கினர்.*

*பல்வேறு குழுக்களாக பிரிந்து மத்திய பொலிஸ் பாதுகாப்புப் படை உதவியுடன் சோதனை நடைபெற்றது. 10 இடங்களில் நள்ளிரவு வரை சோதனை நடைபெற்றது. சோதனை முடிவில் அமைச்சர் செந்தில்பாலாஜி சென்னையில் கைது செய்யப்பட்டார்.*

*இதையடுத்து அமைச்சரின் சொந்த ஊரான கரூரில் பல்வேறு இடங்களில் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அந்தந்த காவல் நிலையங்களில் பொலிஸார் தயார் நிலையில் இருக்க மாவட்ட பொலிஸ் கண்காணிப்பாளர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.*

*(ஐ)*

# அமைச்சர் செந்தில் பாலாஜி மருத்துவமனையில் சேர்ப்பு

*சென்னை, ஜூன் 15*

*தமிழக மின்சார துறை அமைச்சர் செந்தில்பாலாஜியை வருவாய் துறை நேற்று நள்ளிரவு கைது செய்த நிலையில் அவருக்கு நெஞ்சுவலி ஏற்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது. இதனைத் தொடர்ந்து அவர் சென்னை ஓமந்தூரார் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.*

*மருத்துவமனையின் 6ஆவது தளத்தில் அவர் சிகிச்சையில் உள்ளார். அவரின் உடல்நிலை குறித்து மருத்துவமனை அதிகாரபூர்வமாக எவ்வித அறிவிப்பும் இதுவரை வெளியிடவில்லை.*

*இருப்பினும் அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட போது உயர் இரத்த அழுத்தம் இருந்ததாகவும் அது தற்போது சீராக இருப்பதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. அவருக்கு அறுவைச் சிகிச்சை தேவை என்பதால் பிணைக் கோரிக்கையை நீதிமன்றில் முன்வைக்க அமைச்சர் தரப்பு தீர்மானித்துள்ளது.*

# விசாரணைக்கு ஒத்துழைக்காமல் செந்தில் பாலாஜி நாடகமாடுகிறார்

## அண்ணாமலை குற்றச்சாட்டு

*சென்னை, ஜூன் 15*

*விசாரணைக்கு ஒத்துழைப்பு கொடுக்காமல் அமைச்சர் செந்தில்பாலாஜி நாடகம் ஆடுகிறார் என்று தமிழக பா. ஜ. க. தலைவர் அண்ணாமலை குற்றஞ்சாட்டியுள்ளார்.*

*அமைச்சர் செந்தில்பாலாஜி தொடர்புடைய இடங்களில் அமுலாக்கத்துறை சோதனை தொடர்பாக தமிழக பா. ஜ. க. தலைவர் அண்ணாமலை சென்னையில் செய்தியாளர்களை சந்தித்தார்.*

*“செந்தில்பாலாஜி போக்குவரத்து அமைச்சராக இருந்தபோது போக்குவரத்துத் துறையில் வேலை வாங்கித் தருவதாக மோசடி*



*நடைபெற்றது. உச்ச நீதிமன்ற உத்தரவின்படி வருவாய் துறை தனது கடமையை சுதந்திரமாக செய்து வருகிறது. மொறீசியஸ் உட்பட வெளிநாடுகளுக்கு பணப் பரிவர்த்தனை நடைபெற்றதாக குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது. அமைச்சர் செந்தில்பாலாஜியின் கைது நடவடிக்கையில் அரசியல் காழ்ப்புணர்ச்சி எங்கிருந்து வந்தது?. செந்தில்பாலாஜி கைது நடவடிக்கையில் கடுகளவுகூட காழ்ப்புணர்ச்சி இல்லை.*

*யாரையும் பழிவாங்கும் எண்ணம் பா. ஜ. கவுக்கு இல்லை. செந்தில்பாலாஜிமீது நடவடிக்கை பாயும் என்பது முன்கூட்டியே தெரிந்தது தான். உரிய ஆதாரங்கள் இருப்பதால்தான் அமுலாக்கத் துறை நடவடிக்கை எடுத்துள்ளது. விசாரணைக்கு ஒத்துழைப்பு கொடுக்காமல் அமைச்சர் செந்தில்பாலாஜி நாடகமாடுகிறார்.” என்றார்.*

*(ஐ)*

# உரிமம் இல்லாத மதுவிடுதிகள் மூலம் பல்லாயிரம் கோடி ரூபாய் முறைகேடு

## எடப்பாடி பழனிசாமி சாடல்

*சென்னை, ஜூன் 15*

*உரிமம் இல்லாத மது விடுதிகள் மூலம் பல்லாயிரம் கோடி (இந்திய) ரூபாய் முறைகேடு நடைபெற்றுள்ளதாகவும் முதல்வரின் குடும்பத்துக்கு பணம் சென்றதாக செய்திகள் வருகின்றன என்று எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.*

*சென்னையில் எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது பேசிய அவர்,*

*“மின்சாரத்துறை அமைச்சர் செந்தில்பாலாஜியை வருவாய் துறை கைது செய்துள்ளதாக செய்திகள் வந்துள்ளன. போக்குவரத்துறை அமைச்சராக இருந்த காலத்தில் பணம் பெற்றது தொடர்பாக ஏற்கனவே, அவர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. செந்தில்பாலாஜி கைதுக்கு காரணமான வழக்கு தற்போது பதிவு செய்ததல்ல. உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில்தான் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.*

*மதுக் கடைகள் கேள்வி கோரல் மூலம் விடப்படவில்லை. 2 ஆண்டுகளாக முறைகேடாக மது விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. அரசுக்கு வருகின்ற வருவாய் தி. மு. கவினர் மூலமாக மேலிடத்திற்கு சென்று கொண்டு இருப்பதாக செய்திகள் வந்துள்ளது. இது குறித்து ஆளுநரிடம் புகார் அளிக்கப்பட்டுள்ளது.*

*2 ஆண்டுகளில் முறைகேடாக பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய்களை கொள்ளையடித்துள்ளனர். இப்படி பல கோடி ரூபாய் முதல்வரின் குடும்பத்துக்குச் சென்றதாக பத்திரிகை செய்திகள், வெளி வட்டார செய்திகள் வந்து கொண்டுள்ளன.*

*செந்தில்பாலாஜி உத்தமர் போல முதல்வர் பேசுகிறார். முதல்வர் மு. க. ஸ்டாலின் இரட்டை வேடம் போடுகிறார். மனித உரிமை குறித்து பேசுவதற்கு முதல்வர் மு. க. ஸ்டாலினுக்கு தகுதி இல்லை. ஆதாரம் இருந்ததால்தான் தலைமைச் செயலகத்தில் சோதனை நடத்தப்பட்டுள்ளது. அமைச்சர் பதவியை செந்தில்பாலாஜி ராஜினாமா செய்ய வேண்டும் - என்றார்.*

*(ஐ)*

# அரசிலிருந்து விலகுவோம்!

## சனத் நிஷாந்த பகிரங்க எச்சரிக்கை



கொழும்பு, ஜூன் 15

**"சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் மாவட்ட தலைவர்களுக்கு உரிய அங்கீகாரம் இல்லாவிட்டால் அரசில் இருந்து வெளியேறுவது பற்றி சிந்திக்கநேரிடும்."**

-இவ்வாறு மொட்டுக் கட்சியைச் சேர்ந்த இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்-

குடுகாரர்கள் மற்றும் தெருச் சண்டியர்களுக்கு அஞ்சி ஒளியும் நபர்கள் நாங்கள் கிடையாது.

எங்கள் வாக்குகளால்தான் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியானார். அவர் ஜனாதிபதியான பின்னர் பாலித ரங்கே பண்டார உள்ளிட்ட ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் கொக்கரிக்க ஆரம்பித்துள்ளனர். அதிகமாகத் துள்ளவேண்டாம் என எச்சரிக்கின்றோம்.

பொதுஜன பெரமுனவுக்காக உழைத்தவர்கள்தான் கட்சியின் மாவட்ட தலைவர்கள். அவர்களுக்கு உரிய இடமில்லையேல், அப்படியானதொரு அரசில் இருக்க வேண்டியதில்லை-என்றார். (அ)

# 20 வயது யுவதி துஷ்பிரயோகம் பொலிஸ் சார்ஜன்ட் கைதானார்

கொழும்பு, ஜூன் 15

20 வயதான யுவதியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டின் பேரில் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக ரஸ்நாயக்கபுர பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரான சார்ஜன்ட், பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவில் கடமையாற்றியவர் என தெரியவந்துள்ளது.

அவர் கடந்த 2021ஆம் ஆண்டு முதல் நிகவெரட்டிய பிரிவு குற்றப் புலனாய்வுப் பிரிவில் தற்காலிகமாக நியமிக்கப்பட்டவர் எனவும் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

சந்தேகத்திற்குரிய பொலிஸ் சார்ஜன்ட் குறித்த யுவதியின் உறவினர் என பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த யுவதி தனியாக இருந்தபோது வீட்டுக்குள் நுழைந்த இந்த பொலிஸ் சார்ஜன்ட் அவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளதாக பொலிஸ் வட்டாரங்களிலிருந்து தெரியவந்துள்ளது. (அ)

# ஜனாதிபதி தேர்தலில் மொட்டு வேட்பாளரே நிறுத்தப்படுவார்!

கொழும்பு, ஜூன் 15

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் பொதுஜன பெரமுனவின் வேட்பாளரை நிறுத்த தீர்மானித்துள்ளதாக அந்த கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் கொள்கைகளுக்கு முரணாக செயற்படும் அல்லது வேறு அணியைச் சேர்ந்த ஒருவரை வேட்பாளராக நிறுத்தத் தயாரில்லை. அவ்வாறு செய்வது நாட்டை அராஜக நிலைமைக்குள் தள்ளுவதாக அமைந்துவிடும்.

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் நடைபெறும் பொதுத் தேர்தலில் பொதுஜன பெரமுனவின் தலைமையில் வேட்பாளர்கள் நிறுத்தப்படுவார்கள்.

ஜனாதிபதித் தேர்தலை பலர் எதிர்பார்த்திருந்தாலும் அதற்கு முன்னர் சில தேர்தல்கள் நடத்தப்பட உள்ளன.

அந்த தேர்தல்களுக்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொடுத்து, மக்களின் நிலைப்பாட்டை அறிய எமது கட்சி நடவடிக்கை எடுத்து வருகிறது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பலரது பெயர்கள் தற்போது பேசப்பட்டு வருகின்றன.

எனினும் பொதுஜன பெரமுனவின் சார்பில் ராஜபக்ஷ ஒருவரே ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப்படுவார் என்பது 90 வீதம் உறுதியானது என அந்த சிரேஷ்ட உறுப்பினர் மேலும் கூறினார். (அ)

# இலங்கைக்கு நேரடி விமானங்கள் இயக்கும் துருக்கி எயார்லைன்ஸ்

கொழும்பு, ஜூன் 15

கொழும்பு மற்றும் இஸ்தான்புல் இடையே எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் முதல் துருக்கி எயார்லைன்ஸ் நேரடி விமானங்களை இயக்கவுள்ளதாக விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் நிறுவனம் அறிவித்துள்ளது.

இலங்கையில் 10 ஆண்டு காலச் செயற்பாடுகளின் பின்னர் இவ்வாறு நேரடி விமான சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

குறிப்பாக துருக்கி எயார் லைன்ஸ் மட்டுமே இலங்கையை இணைக்கும் சில வட ஐரோப்பிய நாடுகளுக்கு நேரடி விமானங்களை இயக்குகின்றது.

உள்ளூர் அதிகாரிகளின் தொடர்ச்சியான ஆதரவுடன், துருக்கி எயார்லைன்ஸ் இலங்கையை மேம்படுத்துவதில் மகிழ்ச்சி அடைவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# 2 ஆயிரத்து 500இற்கும் மேற்பட்டோர் பயங்கரவாத சட்டத்தின்கீழ் சிறையில்

கொழும்பு, ஜூன் 15

போருக்குப் பின்னர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 500 ஐ தாண்டியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

2009 டிசெம்பர் 31 முதல் 2022 டிசெம்பர் 31 வரையிலான 13 வருடங்களில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 2,793 என இலங்கை பொலிஸின் பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரசன்ன டி அல்விஸ் தெரிவித்தார்.

தடுப்புக் காவல் உத்தரவுகளின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை 2,473 என்பதோடு, 184 பேருக்கு எதிராக குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

'வோச் டோக் ரீம்' உறுப்பினர் யுதன்ஜய விஜேரத்ன, பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பில் கடந்த மார்ச் 13ஆம் திகதி தகவல் அறியும் சட்டத்தின் கீழ் பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவுக்கு தகவல் கோரிக்கை ஒன்றை அனுப்பியுள்ளார்.

புதிய பொதுச் செயலாளர் கட்டடத்தின் ஆறாவது மாடி, கொழும்பு 01, இல. 101, சைத்திய வீதி, பூஸா தடுப்பு நிலையம், தங்காலை பழைய சிறைச்சாலை வளாகம், இல. 149 கிருலப்பனை மாவத்தை, கொழும்பு 05, புடானி கெபிடல் கட்டடம், வவுனியா பொலிஸ் அலுவலக வளாகம், ஓமந்தை அரசமுறிப்பு தடுப்புக் காவல் நிலையம் ஆகிய ஏழு இடங்களில் அவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதை பயங்கரவாத விசாரணைப் பிரிவுத் தலைவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

பயங்கரவாதச் சட்டங்களின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் வெளியில் தெரியாத இடங்களில் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாகின்றனர் என்பதற்கான நம்பகமான ஆதாரங்களை மனித உரிமை அமைப்புகள் பலமுறை வெளிப்படுத்தியுள்ளன.

சர்வதேச உண்மை மற்றும் நீதி செயற்றிட்டம் மற்றும் இலங்கையில் ஜனநாயகத்திற்கான ஊடகவியலாளர்கள் மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் வெளியிட்ட அறிக்கையில், பொலிஸ், இராணுவம், கடற்படை மற்றும் பல்வேறு துணை இராணுவக் குழுக்களால் நாடு முழுவதும் சுமார் 220 இடங்கள் "சித்திரவதைத் இடங்களாக" பராமரிக்கப்பட்டு வருவதை வரைபடமாக வெளிப்படுத்தியிருந்தன. (அ)

# தாய்லாந்து பெண்கள் உள்ளிட்ட 7 பேர் கைது

கொழும்பு, ஜூன் 15

பாணந்துறை வலான மோசடி தடுப்புப் பிரிவினருக்கு கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து, கொள்ளுப்பிட்டி நகரில் இரண்டு மாடி வீட்டுக்குள் தாய்லாந்து மற்றும் இலங்கைப் பெண்களை பயன்படுத்தி நடத்தப்பட்டு வந்த பாலியல் தொழில் விடுதி முற்றுகையிடப்பட்டுள்ளது.

அங்கு பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்பட்ட இரண்டு தாய்லாந்து பெண்கள், நான்கு இலங்கைப் பெண்களுடன் விடுதியை நடத்தி வந்த நபரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கொள்ளுப்பிட்டி 17ஆவது ஒழுங்கையில் இயங்கி வந்த இந்த பாலியல் விடுதிக்கு பொலிஸார், ஒருவரை அனுப்பி வைத்து, முற்றுகையிட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட தாய்லாந்து பெண்களுக்கு ஆங்கிலம் தெரியாத காரணத்தினால், வாக்குமூலங்களை பதிவு செய்ய முடியவில்லை எனவும் இது குறித்து நீதிமன்றத்திற்கு அறிவித்து, தாய்லாந்து தூதரகத்தில் இருந்து மொழிப்பெயர்ப்பாளர் ஒருவரை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பொலிஸார் கூறினர்.

அதேவேளை வீட்டை குத்தகைக்கு பெற்றுக்கொண்ட நபரையும் பொலிஸார் கைது செய்தனர். தனக்கு இருதய நோய் இருப்பதாகவும் நெஞ்சுவலி இருப்பதாகவும் கூறியதை அடுத்து, அந்த நபர் பொலிஸ் பாதுகாப்புடன் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (அ)

# நிவாரணக் கொடுப்பனவுகள் ஜூலை முதல் வழங்கப்படும்

கொழும்பு, ஜூன் 15

நிவாரணப் பயனாளிகளுக்கான கொடுப்பனவுகள் எதிர்வரும் ஜூலை மாதம் முதல் வழங்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

சுமார் 95 வீத பயனாளிகளின் தகவல்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக தமது ருவிட்டர் பதிவில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் பொறுப்பு வழங்கப்பட்ட குழு அதனை உறுதி செய்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க கூறினார். (அ)



# இலங்கையில் உணவுப் பற்றாக்குறை இருப்பதாக வெளியான செய்திகளில் உண்மை இல்லையாம்!

கொழும்பு, ஜூன் 15

இலங்கையில் 7.5 மில்லியன் மக்கள் உணவுப் பற்றாக்குறையை எதிர்கொள்வதாக வெளியான செய்திகள் பொய்யானவை என உலக உணவுத் திட்டத்திற்கான ஒத்துழைப்புச் செயலகத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி சுலக்ஷனா ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

இலங்கையின் அனைத்து மாகாணங்களிலும் உணவுப் பாதுகாப்பில் முன்னேற்றத்தைக் காட்டுவதாக குறிப்பிடும் பயிர் மற்றும் பாதுகாப்பு மதிப்பீட்டு செயற்பாட்டு கண்டுபிடிப்புகளுக்கு இது முரணாக இருப்பதாகவும் அவர் கூறினார்.

# கண்ணாடி முன் நின்று பார்க்கையில் ஒரு ஜனாதிபதியின் முகம் தெரிகிறது

## கூறுகிறார் சரத் பொன்சேகா

**கொழும்பு, ஜூன் 15**

**கண்ணாடி முன் நின்று பார்க்கும் போது நாட்டை வழிநடத்தக்கூடிய ஒரு தலைவரை காண்பதாக கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.**



பூகொட மண்டாவல, ரணவிரு கிராமத்தில் இடம்பெற்ற போர்வீரர் கொண்டாட்டத்தில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- இன்று நாட்டை ஆட்சி செய்பவர்கள் மட்டுமின்றி பலர் போர் வீரர்களை மறந்து விடுகின்றனர். இப்போது சிலருக்கு போர் நடந்ததா என்று கூடத் தெரியாது. மொத்தத்தில் தற்போதைய அரசாங்கம் உட்பட எந்த அரசாங்கமும் போர்வீரர்களை கண்டுகொள்ளவில்லை.

வடக்கு-கிழக்கில் இராணுவத்தின் தேவைக்காக முகாம்கள் அமைக்கப்பட்ட சில காணிகள் உள்ளன. கையகப்படுத்தப்பட்ட சில நிலங்களைத் திருப்பித் தரவும் வாய்ப்புள்ளது. ஆனால், அரசியல் நலன் கருதி அந்த நிலங்களை திருப்பிக்கொடுப்பதை ஏற்க முடியாது.

வடக்கு-கிழக்கில் வாக்குகளுக்காக பேராசை கொண்ட சக்திகளுக்காக பாதுகாப்புப் படையினரை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் மற்றும் தவறான இடத்தில் வைக்கும் போக்கு தற்போது காணப்படுகிறது.

என்ன ஒரு கோழைத்தனமான செயல். நாங்கள் அவர்களுக்கு எதிரானவர்கள்.

தற்போதைய ஆட்சியே கோழைத்தனமானது. அருவருப்பானது. பலவீனமாக உள்ளது. அர்ப்பணிப்புடன் பணியாற்றக் கூடிய அறிவார்ந்த தலைவர் இந்த நாட்டுக்கு தேவை. அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவீர்களா என்று பலர் கேட்கிறார்கள். கேட்பது எளிது. ஆனால் பதில் சொல்வது கடினம்.

சரியான தலைமையை தெரிவு செய்வதற்கு நாட்டு மக்கள் தியாகங்களைச் செய்தால் அதற்கான முன்மொழிவுகளை பரிசீலிக்க வாய்ப்பு உள்ளது. இருந்தாலும், வீட்டில் கண்ணாடி முன் பார்க்கும்போது, எதிர்காலத்தில் நாட்டை வழிநடத்தக்கூடிய ஒரு தலைவரைக் காண்கிறேன்.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு வணக்கம் செலுத்த முடியும், ஏனெனில் தற்போதைய ஜனாதிபதி ராஜபக்ஷவைப் போல ஊழல்வாதி அல்லர். ஆனால் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நான் அவருக்கு எந்த வகையிலும் ஆதரவளிக்கமாட்டேன்-என்றார். (அ)

# தாதியர் பரீட்சை பெறுபேறுகளை மீளாய்வு செய்யுமாறு கோரிக்கை

கொழும்பு, ஜூன் 15

தாதியர் பரீட்சை பெறுபேறுகளை மீளாய்வு செய்ய வேண்டும் என அரச தாதியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் தாதியர் சங்கத்தின் தலைவர் நாலக ஹெட்டியாராச்சி தெரிவிக்கையில்-

ஒரே பெறுபேற்றைப் பெற்ற இருவரில் ஒருவர் சித்தியடைந்துள்ளார். மற்றையவர் சித்தியடையவில்லை என பதிவு செய்யப்பட்டுள்ளது.

சித்தியடையாத மற்றுமொருவர் பெறுபேறுகளின் அடிப்படையில் சித்தியடைந்துள்ளார்.

இது போன்ற விடயங்கள் தொடர்பில் சுகாதார அதிகாரிகள் உடனடியாக கவனம் செலுத்த வேண்டும்-என்றார்.

அங்கு கருத்து தெரிவித்த அரச தாதியர் சங்கத்தின் செயலாளர் அஜித் ரத்நாயக்க,

கடந்த வாரம் வெளியான தாதியர் பரீட்சைக்கு தோற்றிய 2595 பேரில் 656 பேர் சித்தியடையவில்லை. தேர்ச்சி பெற்றவர்களின் எண்ணிக்கை 884.

பெறுபேறுகளில் இவ்வாறான சில பிரச்னைகள் காணப்படுவதால், ஒரு வாரத்திற்குள் மீளாய்வு செய்து முடிவுகளை வெளியிடுமாறு உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கிறோம்-என்றார். (அ)

# பஸ் சாரதி கைது!

கொழும்பு, ஜூன் 15

கொழும்பு -குருநாகல் மார்க்கத்தில் அலவ்வ பிரதேசத்தின் ரயில் பாதையின் குறுக்கே நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணியளவில் பஸ் ஒன்று பாதுகாப்பற்ற முறையில் பயணித்ததாகவும் குறித்த பஸ் ரயிலால் மோதப்படும் விபத்திலிருந்து தப்பியதாகவும் பொல்கஹவெல போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளையடுத்து குறித்த பஸ் சாரதி கைது செய்யப்பட்டார்.

ரயில் கடவையின் ஊடாக பஸ்ஸை கவனக்குறைவாகச் செலுத்தி கொலைகளுக்கு முயற்சி செய்த குற்றச்சாட்டின் பேரிலேயே பஸ் சாரதி கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கல்னேவவிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த இந்த பஸ்ஸில் 40 பேர் பயணித்துள்ளமையும் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. (அ)

# பாடசாலை உபகரணங்களின் விலையை குறைக்க நடவடிக்கை

கொழும்பு, ஜூன் 15

எதிர்வரும் இரண்டு வாரங்களில் பாடசாலைப் பைகள், அப்பியாச புத்தகங்கள் மற்றும் காலணிகளின் விலை மேலும் குறைக்கப்படலாம் என அகில இலங்கை சிறு கைத்தொழிலாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி அதிகரிப்பு போன்ற காரணங்களால் இந்த நிவாரணத்தை மக்களுக்கு வழங்க முடியும் என அதன் தேசிய அமைப்பாளர் நிருக்ஷ குமார தெரிவித்தார்.

அதன்படி குறித்த பொருட்களின் விலைகளை 20 வீதம் முதல் 25 வீதம் வரை குறைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார். (அ)

# மூளைச் சாவடைவோரின் சிறுநீரகங்களை தானமாக வழங்குவதற்கு முன்வரவேண்டும்

## வைத்திய நிபுணர் எஸ்.மதிவாணன் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 15

மூளைச்சாவடைந்து இறந்தவரின் சிறுநீரகத்தினை தானமாக வழங்குவதற்கு உறவினர்கள் முன் வரவேண்டும் என சிறுநீரக வைத்திய நிபுணர் எஸ்.மதிவாணன் கோரிக்கை விடுத்தார்.

சிறுநீரக மாற்று சிகிச்சைக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், வைத்தியர்கள் மற்றும் சட்டத்தரணிகளுக்கு இடையில் இடம்பெறவுள்ள கிரிக்கெட் போட்டி தொடர்பாக இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

திடீரென ஏற்படும் விபத்து மற்றும் சில நோய் காரணமாக மூளை சாவடைந்து இறந்தவர்களின் இதயம் சில மணி நேரங்கள் இயங்கிக் கொண்டிருக்கும் பொழுது அவர்களது சிறுநீரகத்தை அறுவைச் சிகிச்சை மூலமாக தேவைப்படும் ஒருவருக்கு பொருத்த முடியும்.

எனவே அவ்வாறு சிறுநீரகத்தை தானம் தருவதற்கு பொது மக்கள் முன் வர வேண்டும்.

கடந்த காலங்களில் சிறுநீரகம் செயலிழந்த ஒருவருக்கு சிறுநீரகத்தை பொருத்துவதற்காக கண்டி வைத்தியசாலை வைத்திய நிபுணர்கள் சிலர் சிறுநீரகத்தை பெற்று தருவதற்கான உதவியை வழங்கியிருக்கிறார்கள்.

எனவே, இது தொடர்பான விழிப்புணர்வு பாடசாலை மாணவர்கள் மத்தியிலும் ஏனைய பொதுமக்கள் மத்தியிலும் ஏற்படுத்தி பிற உயிரை வாழ வைக்கும் சந்தர்ப்பத்தினை ஏற்படுத்த முன்வர வேண்டும்-என்றார். (அ)

# மாலைத்தீவுக்கு இலங்கையிலிருந்து 50,000 கலப்பினத் தென்னங்கன்றுகள்

கொழும்பு, ஜூன் 15

இலங்கை தென்னை ஆராய்ச்சி நிறுவனத்திடம் இருந்து மாலைதீவில் நடுகை செய்வதற்காக 50,000 கலப்பின தென்னை நாற்றுகளை பெற மாலைதீவு எதிர்பார்த்துள்ளது.

அந்நாட்டு விவசாய அமைச்சர் கலாநிதி ஹூசைன் ரஷீத் ஹசன், பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் கலாநிதி ரமேஷ் பத்திரனவை சந்தித்த போது இது தொடர்பில் கோரிக்கை விடுத்துள்ளதுடன், இந்தக் கோரிக்கையை விரைவில் நிறைவேற்றித் தருமாறு கேட்டுள்ளார்.

இது குறித்து தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் மல்ராஜ் பீரிஸ் தெரிவிக்கையில்-

தென்னை மரக்கன்றுகளுக்கான வருடாந்த தேவைக்கு ஏற்ப தமது நிறுவனம் வருடாவருடம் தென்னை மரக்கன்றுகளை உற்பத்தி செய்வதால் 50,000 தென்னை மரக்கன்றுகளை மாலைதீவுக்கு வழங்க முடியாது.

தற்போது மாலைதீவுக்கு சுமார் 10,000 தென்னை மரக்கன்றுகளை வழங்குவதற்கு எமது நிறுவனங்களுக்குத் திறன் உள்ளது. அந்த அளவு தென்னை மரக்கன்றுகளை மாலைதீவுக்கு ஏற்றுமதி செய்ய 17 கொள்கலன்கள் தேவைப்படும்.



ஒரு கலப்பின தென்னங்கன்றை உற்பத்தி செய்வதற்கு குறைந்தது பத்து மாதங்களாவது தேவைப்படுவதால், அந்தக் காலப்பகுதிக்குள் மாலைதீவு கோரும் முழு அளவிலான தென்னங்கன்றுகளை உற்பத்தி செய்யும் திறன் எமது நிறுவனத்திற்கு இல்லை-என்றார். (அ)

# உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு பணி இன்று ஆரம்பம்

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
பரீட்சைத் திணைக்களம் - இலங்கை
Department of Examinations - Sri Lanka

கொழும்பு, ஜூன்15

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையின் விஞ்ஞானப் பாடம் உட்பட 40 பாடங்களின் விடைத்தாள்களை மதிப்பீடு செய்யும் பணி இன்று ஆரம்பமாகவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஜூலை 4 ஆம் திகதி வரை 18 நகரங்களை மையமாக வைத்து மதிப்பீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள பாடசாலைகளை ஓரளவுக்கு பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

மதிப்பீட்டுப் பணிகள் நிறைவடைந்த பின்னர் உயர்தர ஆங்கில வழி விடைத்தாள்களை மதிப்பிடும் பணிகள் ஆரம்பிக்கப்படும் என பரீட்சை திணைக்களம் கூறியுள்ளது. (அ)

# ஜனாதிபதியுடன் பெரமுனவுக்கு முரண்பாடு எதுவும் கிடையாது!

## கூறுகின்றார் பிரசன்ன ரணதுங்க



**கொழும்பு, ஜூன் 15**

**ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் எவ்வித முரண்பாடுகளும் இல்லை என ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரும், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.**

ஜனாதிபதிக்கும் பொதுஜன பெரமுனவுக்கும் இடையில் முரண்பாடு இருப்பதாக சிலர் சுட்டிக்காட்டியுள்ளதாக அமைச்சர் கூறினார்.

ரணில் விக்கிரமசிங்கவின் அனுபவத்தையும் சவால்களை எதிர்கொள்ளும் திறனையும் உன்னிப்பாக ஆராய்ந்த பின்னரே அவரை ஜனாதிபதி பதவிக்கு நியமிக்க பொதுஜன பெரமுன ஆதரவளித்ததாக பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எடுத்துள்ளார். ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் தற்போது அமுல்படுத்தும் வேலைத்திட்டத்தின் பிரகாரம் இந்நாட்டின் பொருளாதாரம் மீண்டுவருமென மக்கள் பலமாக நம்புவதாகவும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மேலும் குறிப்பிட்டார். (அ)

# ரயில்வேயின் காணிகளை குத்தகைக்கு வழங்க திட்டம்

கொழும்பு, ஜூன்

ரயில்வே திணைக்களத்துக்குச் சொந்தமான காணிகளை குத்தகைக்கு வழங்க முதலீட்டாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

சுற்றுலா அபிவிருத்தி மற்றும் ஏனைய செயல்பாடுகளை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகளை முன்வைக்குமாறு தனியார் துறையிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இதற்காக எதிர்வரும் 24 ஆம் திகதி வரை கால அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது.

கரையோர ரயில் மார்க்கத்தில் கொம்பனித்தெரு, கொள்ளுப்பிட்டி, பம்பலப்பிட்டி மற்றும் வெள்ளவத்தை ஆகிய பகுதிகளிலுள்ள ரயில்வே திணைக்களத்துக்கு சொந்தமான காணிகள் முதலீட்டாளர்களுக்கு குத்தகைக்கு வழங்கப்படவுள்ளன.

இதற்கு மேலதிகமாக மலையக மார்க்கத்தின் சுற்றுலா தளங்களை மையமாகக்கொண்ட இடங்களையும் குத்தகைக்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், ரயில்வே காணிகளை குத்தகைக்கு வழங்கும் திட்ட முன்மொழிவுகளின் செயற்திறன், அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு அதனூடாக கிடைக்கும் பங்களிப்பு மற்றும் இடையூறுகளின்றி ரயில்வே திணைக்களத்தின் சேவைகளை முன்னெடுப்பது தொடர்பான விடயங்கள் இதன்போது கவனத்திற் கொள்ளப்படவுள்ளன. (அ)

# ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி

கொழும்பு, ஜூன் 15

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி மீண்டும் சடுதியாக வீழ்ச்சியடைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

கடந்த சில வாரங்களில் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி 285 ரூபா வரை அதிகரித்திருந்தது.

எனினும், நேற்று ரூபாவின் பெறுமதி 300 ரூபாவை விஞ்சி வீழ்ச்சியடைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரி விக்கிறது.

அதன்படி, அமெரிக்க டொலரின் இன்றைய கொள்முதல் விலை 303.19 ரூபாவாகவும், விற்பனை விலை 318.99 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

நேற்றுமுன்தினம் அமெரிக்க டொலரின் கொள்முதல் பெறுமதி 294.91 ரூபாவாகவும், விற்பனை பெறுமதி 309.22 ரூபாவாகவும் பதிவாகியிருந்தது. (அ)

# உள்ளூராட்சி நிறுவனங்கள் - ஆளுநர்களை ஒருங்கிணைப்பதற்கு அதிகாரிகள் நியமனம்

கொழும்பு, ஜூன் 15

மாகாண ஆளுநர்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு இடையில் ஒருங்கிணைக்கும் அதிகாரி ஒருவரை நியமிக்குமாறு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ஜனக வக்குபுர தெரிவித்தார்.

மாகாண ஆளுநர்களுடனான சந்திப்பின்போதே இந்த பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

பொதுமக்களுக்கு மிகவும் வினைத்திறனான சேவையை வழங்குவதற்காக அத்தகைய நடவடிக்கையை மேற்கொள்ள மாகாண ஆளுநர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விடயத்தில் அதிகளவான கையூட்டு, ஊழல்கள்!

## உயர்நீதிமன்றில் மனு தாக்கல்

கொழும்பு, ஜூன் 15

கொழும்பு கடற்பரப்பில் தீக்கிரையாகி கடல் வாழ் உயிரினங்களுக்கு பேரழிவை ஏற்படுத்திய எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலின் நிதி விவகாரங்களில் அதிகளவான கையூட்டு மற்றும் ஊழல்கள் இடம்பெற்றதாக, உயர்நீதிமன்றில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இலங்கையின் டிரான்ஸ்பரன்சி இன்டர்நஷனல் உள்ளிட்ட மூன்று அமைப்புக்களினால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பொது நலன் கருதி தாக்கல் செய்யப்பட்ட இந்த தலையீட்டு மனுவில், எக்ஸ்பிரஸ் பேர்ள் பேரழிவின் பின்னர் கோரப்படும் இழப்பீட்டு கோரிக்கையைச் சுற்றி, முறைகேடு, தவறாக கையாளுதல், நாசவேலை, கையூட்டு மற்றும் ஊழல் போன்ற கடுமையான குற்றச்சாட்டுக்களை மனுதாரர்கள் சுமத்தியுள்ளனர்.

அத்துடன் எக்ஸ்பிரஸ் பேர்ள் பேரழிவின் இழப்பீட்டு கோரிக்கையைச் சுற்றியுள்ள தலையீடு மற்றும் வெளிப்புற அழுத்தம் பற்றி மனுதாரர்கள் தரப்பினர் தமது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்நிலையில் இன்று வியாழக் கிழமையை உயர்நீதிமன்றம், மனுவுக்கு சார்பான சமர்ப்பணங்களுக்காக நிர்ணயித்துள்ளது. (அ)

# உத்தரவுக்கு பணியாதவர் மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு!

கொழும்பு, ஜூன் 15

ரம்புக்கனை பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயமடைந்துள்ளதாக பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார்.

நேற்று அதிகாலை 3.15 அளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ரம்புக்கனை - ஹிரிவடுன்ன பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரே துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியுள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

பொலாகம, கொட்டகம சந்தியில் சோதனை கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார், வீதியில் பயணித்த உந்துருளியொன்றை நிறுத்துமாறு உத்தரவிட்டுள்ளனர்.

எனினும், உத்தரவை மீறி உந்துருளி ஓட்டுநர் பயணித்ததால் பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியதாக பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார்.

சம்பவத்தில் குறித்த நபரின் இடது கை மற்றும் இடது காலில் காயங்கள் ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்நிலையில், அவர் சிகிச்சைக்காக கேகாலை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# வவுனியாவில் பழைய பஸ் நிலையம் வரை இடம்பெறவுள்ள அரச, தனியார் பஸ் சேவை

வவுனியா, ஜூன் 15

வவுனியாவில் உள்ளூர் சேவைகளில் ஈடுபட்டுவரும் அரச தனியார் பஸ்கள் பழைய பஸ் நிலையம் வரை சென்று ஐந்து நிமிடங்கள் தரித்து நின்று சேவையில் ஈடுபடவேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வவுனியா நகரத்தில் உள்ள சில முக்கிய பிரச்னைகள் தொடர்பாக வவுனியா மாவட்ட செயலாளர் தலைமையில் கலந்துரையாடல் ஒன்று நேற்று இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் பழைய பஸ் நிலையம் வரை உள்ளூர் பஸ் சேவைகளை நடத்துவதற்கான செயல்பாட்டை முன்னெடுக்குமாறு வர்த்தகர் சங்கத்தினரால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

குறிப்பாக அந்தப் பகுதியில் அதிகளவான வியாபார நிலையங்கள் இருப்பதால் பொதுமக்கள் அங்கு வந்து செல்வதில் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர்.

எனவே குறித்த விடயம் தொடர்பாக கரிசனை கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. குறித்த விடயம் தொடர்பாக அரச, தனியார் பஸ் தரப்பினரிடமும் கருத்துக்கள் கோரப்பட்டன.

இதன்போது பழைய பஸ் நிலையப் பகுதிக்குள் சேவையில் ஈடுபடுவதில் தமக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்று அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து குறித்த நடைமுறையை அமுல்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டதுடன், இது தொடர்பாக வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் பிரதம செயலாளர் ஆகியோருக்கும் தெரியப்படுத்தி மேலதிக நடவடிக்கையை முன்னெடுக்குமாறு தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை, மாவட்டத்தில் சேவையில் ஈடுபடும் முச்சக்கரவண்டிகள் அதிகளவான கட்டணங்களை வசூலிப்பதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

குறிப்பாக முதலாவது கிலோமீற்றருக்கு 120 ரூபாயும் அடுத்துவரும் கிலோ மீற்றர்களுக்கு 100 ரூபாயும் அறவிடுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு தெரிவிக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த வவுனியா மாவட்ட முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத் தலைவர், தற்போது வவுனியாவில் முதலாவது கிலோ மீற்றருக்கு 150 ரூபாயும் அடுத்து வரும் கிலோமீற்றர்களுக்கு 100 ரூபாயும் அறவிடுவதாகவே தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவற்றைவிட அதிக கட்டணம் அறவிடப்பட்டால் குறித்த முச்சக்கரவண்டிகள் தொடர்பாக எமக்கு தெரியப்படுத்தினால் அது தொடர்பாக நாம் விசாரணை செய்து உரிய நடவடிக்கை எடுப்போம்.

அத்துடன் எரிபொருள் விலை குறைக்கப்பட்டாலும் வாகன உதிரிப்பாகங்களின் விலை அதிகரித்து காணப்படுவதால் முச்சக்கரவண்டி உரிமையாளர்களும் கடுமையாக பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

எனினும் கட்டணத்தை குறைப்பது தொடர்பாக எமது சங்க உறுப்பினர்களுடன் கலந்துரையாடி ஒரு தீர்மானத்துக்கு வருவோம்-என்றார்.

இந்தக் கலந்துரையாடலில் அரச அதிபர் பி.ஏ.சரத்சந்திர, அபிவிருத்திக்குழுத் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கு. திலீபன், மாநகரசபைச் செயலாளர், உதவி பிரதேச செயலாளர், வர்த்தகர் சங்கத்தினர், முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத்தினர், நடைபாதை வியாபாரிகள் சங்கத்தினர் உட்பட பலரும் கலந்துகொண்டனர். (அ)

# அ.தி.மு.கவை அண்ணாமலை சீண்டுவது பா.ஜ.க. மேலிடம் கொடுத்துள்ள திட்டமா?

தமிழகத்தில் பாஜகவுக்கும் அதிமுகவுக்கும் இடையில் தொடர்ந்து வரும் பனிப்போர் அவர்களது கூட்டணியை பாதிக்குமா? தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, பாஜகவுக்கு அதிமுக தேவையா அல்லது அதிமுகவுக்கு பாஜக தேவையா?

பாஜக மாநில தலைவர் அண்ணாமலை தனியார் ஊடகம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில், தமிழகத்தை ஆண்ட கட்சிகளின் ஊழல் குறித்தும் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவே ஊழல் குற்றச்சாட்டின் காரணமாக நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டவர்தான் என்றும் குறிப்பிட்டார்.

இந்தியாவிலேயே ஊழல் மிகுந்த மாநிலமாக தமிழ்நாடு இருப்பதாகக் குறிப்பிடும்போது அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்தார். இது அதிமுகவினரிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

அதிமுக முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் பேசிய போது, “சட்டமன்றத்துக்குள் 20 ஆண்டுகளுக்குப் பிறகு பாஜக 4 இடங்களில் இருப்பதற்கு யார் காரணம்? அதிமுக தானே. அதையும் மறுப்பாரா அண்ணாமலை?

தமிழகத்தில் எங்கள் தலைமையிலான கூட்டணியில் இருக்கும்போதுதான், பாஜகவுக்கு ஓர் அடையாளம் இருக்கும்,” என்று காட்டமாகப் பேசினார்.

அமித் ஷா தமிழ்நாட்டிற்கு வருகை தந்து திரும்பிய உடனேயே இது நடந்துள்ளது என்பதும் கவனிக்கத்தக்கது. இதுகுறித்துப் பேசிய மூத்த பத்திரிகையாளர் பத்ரி சேஷாத்ரி, ஒருவேளை அதிமுகவிடம் இப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பது பாஜக தலைமை அவருக்கு வழங்கிய அசைன்மென்ட்டாக கூட இருக்கலாம் என்று குறிப்பிட்டார்.

ஆனால், பாஜக- அதிமுக கூட்டணியில் தொடர்ந்து விரிசல் வந்துகொண்டே இருப்பதற்குக் காரணம், கூட்டணிக் கட்சியை எப்படி நடத்த வேண்டும் என்பதைக் கருத்தில் கொள்ளாமல், அதிமுகவை அண்ணாமலை மிக மோசமாக நடத்திக் கொண்டிருப்பதாகக் கூறுகிறார் மூத்த பத்திரிகையாளர் குபேந்திரன்.

திங்களன்று சென்னையில் அதிமுக முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசினார். அப்போது, “வெண்ணெய் திரண்டு வரும்போது பானையை உடைக்கும் வகையில்தான் பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலையின் செயல்பாடுகள் இருக்கின்றன.

அவருடைய எண்ணம் தமிழகத்தில் அதிமுக-பாஜக கூட்டணி வெற்றி பெறக்கூடாது. பிரதமராக நரேந்திர மோதி வரக்கூடாது என்பதைப் போலத்தான் அவரது செயல்பாடுகள் இருக்கின்றன.

கூட்டணியில் இருந்துகொண்டே கூட்டணியை விமர்சிப்பது ஏற்றுக்கொள்ள முடியாத செயல். ஒரு மறைந்த தலைவரைப் பற்றிப் பேசுவது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

கூட்டணியை முறிக்கின்ற செயலில் அண்ணாமலை ஈடுபடுவதை அமித் ஷாவும் நட்டாவும் கண்டிக்க வேண்டும். இல்லையென்றால், கூட்டணி குறித்து..” என்று காட்டமாகப் பேசிய ஜெயக்குமார், “நான் சொல்லத் தேவையில்லை. உரிய நேரத்தில் கட்சி முடிவு செய்யும்,” என்று குறிப்பிட்டார்.

### பாஜக-அதிமுக: யாருக்கு யார் தேவை?

முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் செய்தியாளர்களிடையே அண்ணாமலையை விமர்சித்துப் பேசியது குறித்து அறிக்கை வெளியிட்டுள்ள பாஜக மாநில துணைத் தலைவர் கரு.நாகராஜன், அவரது பேச்சைத் தான் வன்மையாகக் கண்டிப்பதாகத் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில், “ஆங்கில பத்திரிகைக்கு அண்ணாமலை கொடுத்த பேட்டியைக்கூட ஒழுங்காகப் படிக்காமல் ஜெயக்குமார் பிதற்றிக் கொண்டிருப்பதாக” கடுமையாக விமர்சித்துள்ளார்.

மேலும், “அண்ணாமலையைப் பற்றிப் பேச அவருக்கு எந்தத் தகுதியும் இல்லையென்றும் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக சிஸ்டத்தை சரி செய்ய வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கும் அண்ணாமலை, என்றுமே உள்ளதை உள்ளபடி பேசுபவர் என்பது தமிழ் மக்களுக்கு நன்கு தெரியும்,” என்றும் குறிப்பிட்டுள்ளார்.

“ஜெயக்குமார் நுனி மரக்கிளையில் அமர்ந்து, கிளையின் அடிப்பகுதியை வெட்டிக்கொண்டிருக்கிறார். இது போன்ற பேட்டிகளால் பாதிப்பு உங்களுக்குத்தான். அவர் என்ன நிலையிலிருந்து பேசுகிறார் என்று புரியவில்லை. எங்கே தன் மகன் போட்டியிடும் தொகுதி பறிபோய் விடுமோ என்று கலங்கிப் போயிருப்பார்.

கூட்டணி என்பது எல்லோரும் இணைந்ததுதான். இதில் பெரியண்ணன் வேலை யாருக்கும் கிடையாது. எனவே அண்ணாமலையின் பேட்டியை திசைதிருப்பி குழப்பம் செய்திட வேண்டும்,” என்று கரு.நாகராஜன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அதிமுகவுக்கு பாஜக தேவையே இல்லை என்கிறார் மூத்த பத்திரிகையாளர் குபேந்திரன். அவர்கள் 60க்கும் மேற்பட்ட இடங்களில் வெற்றி பெற்றது பாஜகவின் ஆதரவால் இல்லை.

அந்தக் கட்சிக்கென தனி பலம் உள்ளது. அப்படியிருக்கும்போது அதன் கூட்டணிக் கட்சியாக இறங்கிச் செல்ல வேண்டிய நிர்பந்தம் பாஜகவுக்குத்தான் இருக்கிறது.

அப்படியிருக்கையில், ஊழல் செய்த கட்சி அதிமுக என்பதைப் போல் கூட்டணிக் கட்சியின் மாநிலத் தலைவர் பேசுவது சரியல்ல. இந்த முறையும் நேரடியாக எதிர்வினை ஆற்றாமல், ஜெயக்குமார், பொன்னையன் போன்றோரை வைத்தே பேசிக்கொண்டிருந்தால், எடப்பாடி பழனிசாமிக்கு கட்சிக்குள் இருக்கும் செல்வாக்கு பெரியளவில் பாதிக்கப்படும்.

அப்படி அவர் எதிர்வினையாற்றவில்லை என்றால் அது அவருக்கே ஆபத்தாக முடிய வாய்ப்புள்ளது.

ஆனால், இருவருக்குமே இருவரும் தேவை என்று கூறும் மூத்த பத்திரிகையாளர் பத்ரி சேஷாத்ரி, “ஒரு தரப்பு அளவுக்கு மீறி அழுத்தத்தைக் கொடுத்துக்கொண்டே இருந்தாலும், அது பிரச்னைக்கு வழிவகுக்கலாம். அதற்காக கூட்டணியே முறிந்துவிடும் என்று சொல்ல முடியாது,” என்று கூறுகிறார்.

பத்ரி சேஷாத்ரியின் கருத்துப்படி, கருணாநிதி, ஜெயலலிதாவுக்குப் பிறகு தமிழ்நாட்டில் ஒரு வெற்றிடம் நிச்சயமாக இருக்கிறது என்றும் அதை நாம் பிடித்துவிட



லாம் என்றும் பாஜக உறுதியாக நம்புகிறது.

இந்தச் சிந்தனை அவர்கள் இருந்தபோது நிச்சயமாக இல்லை என்று கூறும் அவர், “இப்போது அந்த வெற்றிடத்தை நிரப்ப பாஜக முயல்வதால்தான், நம்பிக்கையோடு அதிக இடங்களைக் கேட்டு அழுத்தம் கொடுக்கத் தொடங்கிவிட்டார்கள்.”

ஆகவே, “இந்த விஷயத்தில் தமிழக பாஜகவுக்கும் அதன் மத்திய தலைமைக்கும் அதிமுகவுக்கும் இடையே ஒரு குழப்பம் இருந்துகொண்டே இருக்கப் போகிறது. ஆனால், இப்போதைய சூழலில் இருவருக்குமே இருவரும் தேவைதான்,” என்று கூறுகிறார் பத்ரி சேஷாத்ரி.

### அதிமுக - பாஜக கூட்டணியில் விரிசல் விழுந்துகொண்டே இருப்பது ஏன்?

பத்ரி சேஷாத்ரியின் கூற்றுப்படி, ஆரம்பத்தில் அதிமுகவுடன் “ஓர் ஓரமாக நின்றுகொள்வோம், நம்மால் தனித்து எதுவும் செய்ய முடியாது என்ற அணுகுமுறையைத்தான் பாஜகவின் முந்தைய மாநில தலைவர்கள் கடைபிடித்தனர்.”

ஆனால், “அண்ணாமலை தலைமை ஏற்றபிறகு அந்த அணுகுமுறை மாறியது. உடனடியாக இல்லையென்றாலும், ஒரு குறிப்பிட்ட காலகட்டத்திற்குள் அந்த மாற்றம் நடந்தது.

இது அவரால் மாறியதா அல்லது அது அவருக்குக் கொடுக்கப்பட்ட அசைன்மென்ட்டா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

ஆனால், தேசியக் கட்சியைப் பொறுத்தவரை மத்திய தலைமையுடனான ஒத்திசைவு இல்லாமல், மாநிலத்தில் ஒரு தலைவர் தன் இஷ்டத்திற்குப் பேசுவார் என்பதை நான் நம்பவில்லை. அப்படி இருந்தால் அவரை எளிதில் ஓரம்கட்டிவிடுவார்கள்,” என்று கூறுகிறார் மூத்த பத்திரிகையாளர் பத்ரி சேஷாத்ரி.

ஆனால், அண்ணாமலை கூட்டணியின் முக்கியத்துவத்தை உணராமல் விரிசலை ஏற்படுத்திக் கொண்டிருப்பதாக விமர்சிக்கிறார் மூத்த பத்திரிகையாளர் குபேந்திரன்.

அவரது கூற்றுப்படி, தமிழ்நாட்டைப் பொறுத்தவரை கூட்டணி மிகவும் முக்கியம். கூட்டணிக் கட்சிகளின் துணை இல்லாமல் ஆட்சி அமைக்க முடியாது. அப்படியிருக்கும்போது பாஜக கூட்டணியை இப்படி குறைத்துப் பேசுவது, வெறும் குருட்டு தைரியம் மட்டுமே.

குபேந்திரன், “மாநிலத்தின் ஆகப் பெரிய கட்சிகளான அதிமுக, திமுக கூட கூட்டணி பலமின்றி ஆட்சி அமைப்பது கடினம். அப்படியிருக்கும்போது அண்ணாமலை கூட்டணியை மதிக்காமல் பேசுவது எப்படிப் பலனளிக்





கும்?” என்று கேள்வியெழுப்புகிறார்.

“அண்ணாமலையின் நடவடிக்கைகள் எதுவும் தன் இஷ்டத்தில் செய்வதாக இருக்கும் என்று எனக்குத் தோன்றவில்லை. அமித் ஷா சென்னை வந்துவிட்டுச் சென்றுள்ள இந்தச் சூழ்நிலையில் இப்படி நடப்பது, மத்திய தலைமைக்குத் தெரிந்தே நடப்பதாக இருக்கலாம் என்றே தோன்றுகிறது.

இப்போது அண்ணாமலையின் மூலமாக அதிமுகவுக்கு ஏற்படும் அழுத்தம், பாஜகவின் ஒரு வகை வியூகமாக இருக்கலாம் என்றுதான் கருதுகிறேன்,” என்கிறார் அவர்.

ஆங்கிலத்தில் ‘குட் காப், பேட் காப்’ என்று ஒரு சொலவடை உண்டு. அதாவது, ஒருவர் கடுமையாக நடந்துகொள்வதைப் போலச் செயல்படுவார். மற்றொருவர் மிகவும் இனிமையான, நட்புறவு மிக்க நபரைப் போல் காட்டிக்கொள்வார்.

ஒருவர் கடுமையாகப் பேசும்போது, மற்றொருவர் எதிரில் இருப்பவரைத் தேற்றி, அவருடன் நெருக்கமாகி தன் வழிக்குக் கொண்டு வருவார். இந்த அணுகுமுறை, தொழில்ரீதியிலான ஒப்பந்தங்கள், பேச்சுவார்த்தைகள் எனப் பல விஷயங்களில் கையாளப்படும்.

இத்தகைய குட் காப்-பேட் காப் அணுகுமுறையைக் கூட பாஜக கையில் எடுத்திருக்கக்கூடும் என்று யூகிக்கும் பத்ரி சேஷாத்ரி. “ஒருபுறம் மாநிலத்தில் அண்ணாமலை கடுமையாக நடந்துகொள்வதைப் போல் காட்டிக்கொள்ள, இன்னொருபுறம் அதன் எதிர்வினையாக அதிமுக மத்திய தலைமையிடம் செல்லும்போது அவர்கள் ஆறுதல் வார்த்தைகளைப் பேசி தங்கள் வழிக்குக் கொண்டு வரலாம்” என்ற நினைப்பில் இத்தகைய அணுகுமுறையைக்கையில் எடுத்திருக்கலாம் எனக் கருதுகிறார்.

### அண்ணாமலையின் தலைமை சரியில்லையா?

“அண்ணாமலை கட்சியைப் பற்றி தமிழ்நாடு முழுக்கப் பேச வைத்துள்ளார் என்பதாலேயே அவரைச் சிறந்த கட்சித் தலைவராக மதிப்பிட்டுவிட முடியாது.

கட்சியை அனைத்து இடங்களுக்கும் கொண்டுபோய் சேர்த்துவிட்டதாக பெருமைப்பட்டுக் கொண்டாலும், அதை ஓட்டுகளாக மாற்ற முடிந்தாலொழிய அதில் பெருமைப்பட்டுக்கொள்ள ஒன்றுமில்லை,” என்று விமர்சிக்கிறார் மூத்த பத்திரிகையாளர் குபேந்திரன்.

“இப்போது தமிழ்நாட்டில் வென்ற 4 இடங்களுமே அதிமுகவின் உதவியால் கிடைத்தது. தனியாக நின்று ஒரேயொரு தொகுதியில் வெற்றி பெற்றால், அதற்குப் பிறகு அப்படிப் பெருமைப்படலாம்.

சொந்தக் கட்சிக்கு உள்ளேயும்கூட அவருக்கு ஆதரவு மிகக் குறைவாகத்தான் இருக்கிறது என்பது வெளிப்படையாகவே தெரிகிறது. கூட்டணிக் கட்சியாலும் அவரை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

அப்படியிருக்கும்போது, அவரது தலைமை சரியாக உள்ளது என்று எதை வைத்து மதிப்பிடுவது? என்கிறார் குபேந்திரன்.

இங்கு பிரச்னை அண்ணாமலை இல்லை என்று கூறும் பத்ரி சேஷாத்ரி, அவர் இடத்தில் வேறு யார் இருந்தாலும் தமிழ்நாட்டில் பாஜகவுக்கான இடங்களை பொறுத்தவரை இன்னும் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்ற அணுகுறை கடைபிடிக்கப்பட்டிருக்கலாம்.

எது எப்படி இருப்பினும், “தமிழ்நாட்டில் பாஜகவின் எதிர்காலம் பிரகாசமாக உள்ளது. ஆனால், அது ஏதோ உடனடியாகப் பிரகாசமாகிவிடும் நிலையில் இல்லை.

அதற்கு இன்னும் அதிகமாக உழைக்க வேண்டியுள்ளது. அப்படி உழைத்தால் அடுத்த 10 ஆண்டுகளில் அந்தப் பிரகாசத்தை அடையலாம்,” என்ற நம்பிக்கை பாஜகவுக்கு இருப்பதாக பத்ரி சேஷாத்ரி கூறுகிறார்.

இது அதிமுக, திமுக இரண்டுக்குமே அபாயம் என்றாலும்கூட, “அதற்கான சூழ்நிலை நிச்சயமாக இருக்கிறது. சித்தாந்த ரீதியாக திமுகவை போல் பாஜக மிக உறுதியாக இருப்பதால், அதை நோக்கி ஈர்க்கப்படும் இளைஞர் பட்டாளம் கட்சியில் சேரும்போது, அவர்களது உழைப்பு கட்சியின் மாநில வளர்ச்சியில் நிச்சயம் வலு சேர்க்கும்,” என்று கூறுகிறார் பத்ரி சேஷாத்ரி.

ஈழநாடு



# ஆனந்தசங்கரி ஒரு நீண்ட பயணம்!

**சிறிதரன் சுகு**
(தலைவர் தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி)

1950களில் ஒரு பாடசாலை ஆசிரியர் நவ இந்தியாவின் சிற்பி ஜவஹர்லால் நேருவை வரவேற்க தனது மாணவர்களுடன் கொழும்பு ரத்மலானை விமான நிலையம் சென்றிருந்தார்.

ரத்மலான இந்துக்கல்லூரி தமிழ் பிரிவில் ஆங்கில ஆசிரியராக இருந்த ஆனந்தசங்கரி அவர்கள் தான் அந்த ஆசிரியர்.

அவர் தனது 18வது வயதில் இலங்கையின் முதல் இந்தியாவின் தூதுவராக இருந்தவரும் பின்னர் இந்திய குடியரசு தலைவரானவருமான விவி கிரி அவர்களை சந்தித்திருக்கிறார். அவரை அழைத்து சென்று ஹனுபிட்டிய என்ற கிராமத்தில் காந்தியடிகள் நினைவுதின நிகழ்வை நடத்தியிருக்கிறார். அப்போது ஏ.ஈ குண சிங்கவின் தொளிலாளர் கட்சியில் அங் கத்துவம் வகித்த கொழும்பு மாநகரசபை அங்கத்தவராக இருந்த ஆர் பிரேமதாச வும் இதில் உரையாற்றியிருக்கிறார். பெருந்திரளான கிராமத்து மக்கள் பங்கு பற்றியிருந்தார்களாம்.

இலங்கை சமசமாஜ கட்சியின் ஊடாகவே அவரது அரசியல் பயணம் ஆரம்பமாகியது. கொழும்பு மாநகரசபையில் 1950களில் இலங்கை சமசமசமாஜகட்சி சார்பில் வேட்பாளராக நின்றிருக்கிறார்.

கலாநிதி என் எம் பெரேரா அவர்களின் வழிகாட்டலின் கீழ் அவரது கிளிநொச்சி அரசியல் பயணம் ஆரம்பமாகிறது. உள்ளூராட்சிசபை தொடக்கம் பாராளுமன்றம் வரை.

அன்றைய உள்ளூராட்சி சபைகளின் அடிப்படை அரசியல் அலகான கிராம சபையில் இருந்தே ஆரம்பம். கரைச்சி கிராமசபையின் தலைவராக 60களில் பணியாற்றியிருக்கிறார்.

அக்காலத்தில் இருந்து மக்களின் அன்றாட இன்ப துன்பங்களில் பங்கு பற்றும் சாதாரண மாந்தர்களில் ஒருவராக வாழும் அரசியல் பண்பை வளர்த்துக் கொண்டார்.

அவரது ஊர் பருத்தித்துறை. அங்கு ஏன் அரசியல் பணி செய்ய செல்கிறாய், இங்கு செய்யலாமே என அவரது தாயார் மற்றும் உறவினர்கள் கேட்டார்களாம்.

அரசியல் இலட்சியங்களுக்கப்பால் மக்களின் சமூக பொருளாதார விடயங்களில் தீவிர கரிசனை செலுத்தினார்.

1960 களின் நடுப்பகுதியல் இருந்து அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியில் தமது அரசியல் பணியை தொடர்ந்தார்.

ஆனால் அவர் தனது காந்திய எளிமையை மாற்றிக் கொள்ளவில்லை. அன்றைய மாற்று அரசியல் அமைப்புக்களில் இருந்தவர்களை மதிக்கும் பண்பு அவரிடமிருந்தது.

தான் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களின் நலன்கள் தொடர்பாக அவர் அணுக வேண்டிய அமைச்சர்கள் அதிகாரிகளையெல்லாம் அணுகி காரியம் ஆற்றினார்.

கிளிநொச்சியை தனி நிர்வாக மாவட்டம் ஆக்குவதில் விவசாய பிரதேசமான கிளநொச்சியின் உள்ளக கட்டமைப்புக்களை விருத்தி செய்வதில் கூட்டுறவு துறையை அபிவிருத்தி செய்வதில் அரும் பணியாற்றினார்.

இலங்கையின் அனைத்து சமூகங்கள் மத்தியிலும் அவருக்கு நண்பர்கள் இருந்தார்கள். அன்னியோன்னியம் இருந்தது.

நன்மை தீமைகளில் பங்கு பற்றுவதை அவர் தவறவிடுவதில்லை. அவரது வீடு இரவு பகலாக எப்போதும் திறந்தே இருக்குமாம்.

சோமஸ்கந்தாவிலிருந்து ஹாட்லி, சாகிரா கல்லூரி, சட்டகல்லூரி வரை அவரது பாடசாலை கல்லூரி வாழக்கையும் பரந்த மனப்பாங்கை உருவாக்குவதில் பங்களித்திருந்தது.

பேராசிரியர் சிவத்தம்பி, முன்னாள் தினகரன் ஆசரியர் சிவகுருநாதன், முஹைதீன், ஆனந்தசங்கரி ஆகியோரும் இன்னும் ஊரறிந்த பலரும் சாகிராவின் மாணவர்கள்.

1970களில் தமிழர் விடுதலை கூட்டணி



உருவான பின்னரும் தனது தனித்துவமான சமூகபொருளாதார தேவைகளுடனான தமது செயற்பாடுகளை கை விடவில்லை.

1980களின் பின்னர் ஏற்பட்ட சூழ்நிலைகளில் தமிழகத்தில் தஞ்சமடைந்திருந்தபோது அங்கு புகலிடம் தேடிய சராசரி மனிதராகவே வாழ்ந்தார்.

தோள்களை குலுக்கி நுனிநாக்கால் இங்கிதமாக பேசும் கனிவான கனவான் அரசியல்வாதியல்ல அவர்.

சற்று கரடு முரடான அரசியல்வாதி. மனதில் பட்டதை நெற்றி பொட்டில் தெறித்தது போல் பட்டெனப்பேசம் அசியல் வாதி நெழிவு சுழிவுகள் எல்லாம் அதில் இருக்காது.

1997 உள்ளூராட்சி தேர்தலுக்காக ரத்மலான விமான நிலையத்தில் இருந்து அவர் சரோஜினி யோகேஸ்வரனையும் அழைத்துக் கொ்ணடு யாழ் செல்வதற்கு விமான நிலையம் வந்திருந்தார்.

அப்போது அவர் எமக்கு பரிச்சயமில்லை. அவரது விடாப்பிடியான ஓர்மம் எம்மை கவர்ந்தது.

ஜனநாயகம் தொடர்பான அவரது மனப்பாங்கும் நேர்படப்பேசுங்குணமும் அவரை இரண்டாயிரமாண்டின் முற்பகுதியில் தமிழ்தேசிய கூட்டமைப்பில் அதில் தொடர்ந்து பயணிக்க அனுமதிக்கவில்லை.

ஆனால் தமிழர் விடுதலைக் கூட்டணி கட்சி நீதிமன்ற தீர்ப்பின் மூலம் அவரது தலைமையின் கீழ் வந்தது.

தலைவர் அமிர்தலிங்கம் அவர்கள் படுகொலை செய்யப்பட்ட பின் அவரது நினைவுகளை மீட்க அவருடன் பயணித்த பலர் தயங்கிய காலத்தில் அன்னாரின் நினைவு நிகழ்வுகளையும் நூல்களையும் அமிர்தலிங்கம் ஒரு சகாப்தம் என்ற பெயரில் வெளியிடுவதில் முன்நின்றவர். அவருக்கு அக்காலத்தில் தங்க.முகுந்தன் போன்றோர் உறுதுணையாக நின்றார்கள். தனது மறைந்த அரசியல் சகாக்கள் மாற்று அரசியல்வாதிகளுடனும் நட்பை பேணினார். அல்பிரட் துரையப்பா அவர்களுடனும் அவருக்கு நல்லுறுவிருந்தது.

இந்திய முறையிலான தீர்வையே நாம் அறிந்த காலத்தில் அவர் இடையறாது வலியுறுத்தி வருகிறார்.

வயோதிப காலத்திலும் அலுப்பு சலிப்பில்லாத உழைப்பாளி. ஊடக அறிக்கைகள் பத்திரிகை துணுக்குகளை நேர்த்தியாக ஆவணப்படுத்தியிருப்பார். உடனடியாக காற்றில் பறக்க விடுபவர் அல்ல.

எல்லாவிதமான தோல்விகள் அவமானங்கள் மத்தியிலும் வடக்கு கிழக்கு தெற்கு இந்தியா உலகம் என இறக்கை கட்டி பறந்து கொண்டிருப்பார்.

சுவரசியமான பயணம் ஒன்றை பற்றிக் கூறுவார். லண்டனில் இருந்து மன்னாருக்கு காரில் வந்த கதை. பிரான்சுக்கான சுரங்கப்பாதை, ஆப்கானிஸ்தானின் ஹபர் கணவாய் எல்லாம் தாண்டி நண்பர் ஒருவருடன் காரில் பயணித்து இராமேஸ்வரம் வந்து அங்கிருந்து தலைமன்னார்.

தனது கடந்த கால அறிக்கைகள் நிகழ் கால அறிக்கைகளை தொடர்பு படுத்தி ஆராய்வார்.

சரோஜினி யோகேஸ்வரன், சிவபாலன், மதிமுகராச என யாழ் நகர மேயர்களும் அங்கத்தவர்களும் அதிகாரிகள் ஊழியர்கள் கொல்லப்பட்ட போதும், குண்டுகள் வெடித்துக் கொண்டிருந்த அந்த பயங்கரமான அசாதாரண சூழ்நிலைகளில் ஸ்டான்லி வீதியில் இருந்த தமிழர் விடுதலை கூட்டணி காரியாலயத்தில் பெருந்திரளானவர்களின் பங்கு பற்றலுடனான இரங்கல் கூட்டங்களை கண்டனக் கூட்டங்களை நடத்தினார்.

யாழ் அதிகார வர்க்கம் ஜீரணிக்காத சூழ்நிலையிலும் எது வித சமரசமும் இன்றி செல்லன் கந்தையா அவர்களை யாழ் மாநகர முதல்வராக்க முன் நின்றார்.

தோழர் றொபேட், ஆனந்த சங்கரி அவர்களின் அஞ்சாமை துணிச்சல் பற்றி பல தடவை விதந்துரைத்திருக்கிறார்.

வேறு பல சக இயக்க தோழர்களும் தங்களது அனுபவங்களை கூறியிருக்கிறார்கள்.

யாழ் நூலகம் புனரமைக்கப்படக்கூடாது, அது ஞாபகச் சின்னமாக இருக்க வேண்டும் என்று பேசப்பட்ட காலத்தில் நூல் நிலையம் மீள் புனரமைக்கபட வேண்டும் என்று விடாப்பிடியான உறு



தியுடன் செயற்பட்டார்.

அவரைப்போன்றே செயற்பட்ட தங்கத்துரை அவர்களின் இறுதி சடங்கிற்கு நாமும் புளொட் தலைவர் சித்தார்த்தன் அவர்களும் ஒன்றாக சென்றிருந்தோம்.

இலங்கையின் அன்றைய தலைவர்களான சந்திரிகா பின்னர் மகிந்த, ரணில், ஜேவிபி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, இலங்கை சமசமமாஜ கட்சி, மலையகத்தலைவர்கள் முஸ்லீம் தலைவர்களுடன் உறவுகளை பேணியதோடு அதிகார பகிர்வு தொடபான உரையாடல்களை தொடர்ந்து நடத்தினார்.

அனைத்து கட்சி பிரதிநிதிகள் குழுவிலும் அறிக்கைளை முன்வைத்தார்.

தவிர யுத்தத்ததை முடிவுக்கு கொண்டு வருவது பேச்சுவார்த்தை மூலம் தீர்வு வன்னி வாழ் மக்களின் நலன்களில் ஆழந்த கரிசனை கொண்டிருந்தார்.

சிங்கள ஆங்கில ஊடகங்கள் ஊடகவி யலாளர்கள் அவர் மீது மிகுந்த மரியாதை வைத்திருந்தனர்.

பரஸ்பர சமூக நல்லெண்ணத்தை பேச்சிலும் மூச்சிலும் வெளிப்படுத்தி வந்தார்.

அவர் கிளிநொச்சியில் இருந்து தூரமாக இருக்க நிர்ப்பந்திக்கப்பட்டாலும் அவர் மனதில் கிளிநொச்சி குடி கொண்டிருந்தது.

ஒரு தசாப்தத்திற்கு மேலாக பத்மநாபா ஈபிஆர்எல்எப், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி ஒரு கூட்டமைப்பாக செயற்பட்டோம்.

அக்காலத்தில் இலங்கையின் தலைவர்களை மாத்திரமல்ல இந்திய தலைவர்கள் உலகளாவிய ராஜதந்திரிகளுடன் உறவைப் பேண முடிந்தது.

யதார்த்தமான தீர்வுமுயற்சிகள் சமூகங்களிடையே ஐக்கியத்திற்கான செயற்பாடு களை முன்னெடுக்க முடிந்தது.

முன்னாள் பாரதப்பிரதமர் மன் மோகன் சிங், ஐகே குஜரால், இந்திய வெளி விவகார அமைச்சாகள், வெளிவிவகார செயலாளர், தமிழக அரசியல் தலைவர்கள் என பலரிடமும் சங்கரி அவர்களின் தலைமையில் உரையாட முடிந்தது. இறுதியாக கலைஞர் அவர்களையும் கோபாலபுர இல்லத்தில் சந்தித்து பேசினார். அப்போதெல்லாம் ஆக்க பூர்வமான யதார்த்தமான தீர்வை ஆனந்த சங்கரி அவர்கள் வலியுறுத்தி வந்திருக்கிறார்.

ஒரு முதிர்ந்த அனுபவம் வாயந்த தலைவருக்குரிய மரியாதை இந்த மட்டங்களில் நிலவியது.

2008, 2009 யுத்த இறுதி மாதங்கள் நாட்களில் வன்னியில் வாழ்ந்த மக்களின் பாதுகாப்பில் அவர் அதீத கரிசனை செலுத்தனார்.

2009 இன் முற்பகுதியில் வெறும் 80 ஆயிரத்தில் இருந்து ஒரு லட்சம் பேர் வரை அரசு கட்டுப்பாட்டு பிரதேசத்துக்குள் வந்திருந்த நிலையில் ஏறத்தாழ எல்லாரும் வந்து விட்டார்கள் என்ற பாரதூரமா தவறான வாதம் முன்வைக்கபட்டது.

ஆனால் கிளிநொச்சி மன்னார் முல்லைத்தீவு வவுனியா என மூன்றரை லட்சம் பேர் அங்கிருந்தார்கள் என்று கடுமையான தொனியில் அன்றைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, பசில் மற்றும் புனர்வாழ்வு அதிகாரசபைக்கு பொறுப்பாக இருந்த திவாரட்ண ஆகியோரிடம் வாதிட்டார்.

பின்னர் அரச கட்டுபாட்டு பகுதிக்கு வந்த மக்கள் தொகை ஆனந்த சங்கரி அவர்கள் சொன்னதை உறுதிப்படுததியது. இறுதி நாட்களில் வன்னியல் மனிதாபிமானப்பணியல் ஈடுபட்டிருந்த வைத்தியர்களிடமிருந்தும் அவருக்கு தகவல்கள் வந்தன.

எமது மக்கள் அழிக்கப்படப்போகிறார்கள் என்று தொலைபேசியில் பதட்டமாக கோபமாக பேசினார்.

அவரது மக்கள் நேசிப்பு மானசீகமானது.

அரசியலுக்கான பாசாங்காக இருக்கவில்லை.

ஏற்கனவே கூறியது போல அவர் நைச்சியமான கனவானாக பாசாங்காக மக்களை நேசிக்கவில்லை. அரிதாரம் பூசி நடிக்கவில்லை.

கோஸ்டிவாத பேதங்கள் பாராட்டும் தீண்டாமை பாராட்டும் துரோக முத்திரையிடும் அரசியல் கோலோச்சியதால் சமூக நேர்மை பொருட்படுத்தப்படவில்லை.

மக்களும் உண்மையான மனிதர்களை கண்டறியமுடியவில்லை.

இன்றளவில் இந்த இந்த அவலம் தொடர்கிறது.

ஆக்கபூர்வமான கருத்துக்கள் செவிமடுக்கப்பட்டிருந்தால் பரஸ்பர மரியாதை புரிதல் இருந்திருந்தால் பேரவலங்கள் தவிர்க்கபட்டிருக்கலாம்.

அனுபவம் கூறுவது வேற்றுமையில் ஒற்றுமை கண்டு செயற்படுவதை, ஆனந்த சங்கரி அவர்களின வாழ்வும் பணியும் அதைத்தான் உணர்த்தி நிற்கிறது. ●



# யாழ். இராணுவத் தளபதி அரச அதிபருடன் சந்திப்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 15

யாழ்.மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதியாக பதவியேற்றுள்ள மேஜர் ஜெனரல் சுஜீவ ஹெட்டியாராச்சி நேற்று யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.சிவபாலசுந்தரத்தைச் உத்தியோகபூர்வமாக சந்தித்து கலந்துரையாடினார்.

குறித்த சந்திப்பின்போது தற்போது யாழ்.மாவட்டத்தின் தற்போதைய நிலைமை மற்றும் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்படவேண்டிய பொதுமக்கள் நலன் சார்ந்த வேலை திட்டங்கள் தொடர்பிலும் பேசப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

# வயோதிபர் வெட்டிக்கொலை!

கொழும்பு, ஜூன் 15

வயோதிபர் ஒருவர் கொடூரமாக வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கம்பஹா, வெலிவேரிய பொலிஸ் பிரிவில் இடம்பெற்றுள்ளது.

குறித்த வயோதிபரின் சடலம் வீடொன்றினுள் இரத்த வெள்ளத்தில் இருந்து நேற்று மீட்கப்பட்டுள்ளது.

68 வயதுடைய நபரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

வெலிவேரிய பொலிஸாருக்குக் கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நீதிவான் விசாரணைகளின் பின்னர் சடலம் பிரேத பரிசோதனைக்காக கம்பஹா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (அ)

# மன்னாரில் உள்ள வளங்களை பாதுகாக்க கோரி கவனவீர்ப்பு

## அரச அதிபருக்கும் மகஜர் கையளிப்பு

மன்னார், ஜூன் 15

மன்னார் மாவட்டத்தில் உள்ள வளங்களைப் பாதுகாக்கக் கோரி சூழல் பாதுகாப்பிற்கான கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று புதன்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் மன்னாரில் இடம் பெற்றது.

மன்னார் கரித்தாஸ்- வாழ்வுதயத்தின் ஏற்பாட்டில் மன்னாரில் உள்ள அலுவலகத்திற்கு முன் கரித்தாஸ் வாழ்வுதய

இயக்குநர் அருட்தந்தை எஸ்.அன்ரன் அடிகளார் தலைமையில் இந்தப் போராட்டம் ஆரம்பமானது.

இதில் இளைஞர்,யுவதிகள், சூழல் பாதுகாப்பு குழுவினர், மன்னார் கரித்தாஸ் வாழ்வுதய பணியாளர் களும் கலந்து கொண்டனர்.



இதன் போது கவனயீர்ப்புப் பேரணியில் கலந்துகொண்டவர்கள் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை

ஏந்தியவாறு சென்றனர்.

குறித்த ஊர்வலம் மன்னார் மாவட்ட செயலகத்தை சென்றடைந்தது.

இதனைத் தொடர்ந்து மன்னார் மாவட்ட அரசாங்க அதிபருக்கு எழுதப்பட்ட மகஜர் மன்னார் கரித்தாஸ் வாழ்வுதய இயக்குநர் அருட்தந்தை எஸ்.அன்ரன் அடிகளாரினால் வாசிக்கப்பட்டது. பின்னர் குறித்த கவனயீர்ப்பு

போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் ஒன்றினைந்து மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெலிடம் மகஜரைக் கையளித்தனர். (அ)

# பெண்களுக்கு எதிரான வன்முறையை எதிர்த்து கிளிநொச்சியில் போராட்டம்

கிளிநொச்சி, ஜூன் 15

கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அமைப்பின் ஏற்பாட்டில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டம் நேற்று காலை 9.30 மணியளவில் கோணாவில் சந்திரமுகி சந்தியில் ஆரம்பித்து கோணாவில் விளையாட்டு மைதானத்தில் நிறைவு பெற்றது.



பெண்களுக்கு எதிரான வன்முறைக்கு எதிராக இந்தப் போராட்டம் இடம் பெற்றது.

இந்தப் போராட்டத்தில் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள், பெண்கள் அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலர் கலந்துகொண்டனர். (அ)






ஈழநாடு



# கிழக்கு ஆளுநர் செந்தில் தலைமையில் அம்பாறை மக்கள் குறைதீர்க்கும் சேவை!





**அம்பாறை, ஜுன் 15**

**கிழக்கு மாகாணத்துக்கான புதிய ஆளுநர் செந்தில் தொண்டமான் அம்பாறை மாவட்டத்தின் மக்களின் குறைகளை இலகுவாக தீர்த்து வைக்கும் தனது முதலாவது நடமாடும் மக்கள் சேவையை நேற்று முன் தினம் அம்பாறை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடத்தினார்.**

இதன்போது அம்பாறை மாவட்டத்தின் 20 பிரதேச செயலக பிரிவுகளிலும் உள்ள மக்கள் கலந்துகொண்டு தமது குறைகளை முன்வைத்தனர்.

கல்வி, கலாசாரம், விவசாயம் உட்கட்டமைப்பு வசதிகள், காணிப் பிரச்னைகள் உட்பட பல்வேறு பிரச்னைகள் தொடர்பாக மக்கள் தங்கள் குறைகளை ஆளுநரின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

இதன்போது உடன் தீர்த்து வைக்கப்படக்கூடிய பிரச்னைகளுக்கான தீர்வுகள் நடமாடும் மக்கள் சேவையில் வழங்கப்பட்டதுடன் காலம் தாழ்த்தி தீர்த்து வைக்கப்பட வேண்டிய பிரச்னைகள் தொடர்பாக ஏனைய அதிகாரிகளின் கவனத்திற்கு ஆளுநர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இந்த நடமாடும் மக்கள் சேவையில் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த கல்விக் கல்லூரிகளில் கற்றைநெறிகளை பூர்த்தி செய்து நியமனத்தை எதிர்பார்க்கும் பயிற்சி ஆசிரியர்கள் தம்மை அம்பாறை மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளுக்கு நியமிக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்தனர்.

இதனை கேட்டறிந்து கருத்தில் கொண்ட ஆளுநர் செந்தில் தொண்டமான் மத்திய அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வந்து கல்வியியற் கல்லூரிகளில் பயிற்சிகளை பூர்த்தி செய்தவர்களை கிழக்கு மாகாணத்தில் நியமிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார்.

இந்த நடமாடும் சேவையில் கிழக்கு மாகாண சபை பிரதம செயலாளர் மற்றும் மாகாண அமைச்சுகளின் செயலாளர்கள், மாகாணத் திணைக்களங்களின் தலைவர்கள், மாவட்ட திணைக்களின் தலைவர்கள் பிரசன்னமாகி இருந்தனர். (அ)

# இராமகிருஷ்ண மிஷனில் சர்வதேச யோகா தினம்!



மட்டக்களப்பு, ஜுன் 25

மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் சிறுவர் இல்லத்தில் சர்வதேச யோகா தினம், இல்ல பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் விவேகானந்த சபை ஏற்பாட்டில் சர்வதேச யோகா தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

200 மாணவர்கள் கலந்து கொண்ட நிகழ்வில் கிழக்கு பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் எம். செல்வராஜா உள்ளிட்ட அதிதிகள் கலந்து யோகாவின் மகத்துவம் தொடர்பாக உரையாற்றினார்கள்.

உதவி பொது முகாமையாளர் சிறிமத் சுவாமி சுரர்ச்சிதானந்தா ஜீ மகராஜ் விசேட உரையாற்றினார். (அ)



திருக்கோணமலையில் வரலாற்று சிறப்புமிக்க சல்லியம்பதி அருள்மிகு முத்துமாரியம்மன் ஆலய 9 ஆம் நாள் திருவிழாவின் போது அம்பாள் திருவீதி வலம் வரும் திருக்காட்சி. (அ)

# கிராமத்துடனான கலந்துரையாடல் திட்டத்தின் கீழ் மட்டக்களப்பில் தொழில் உபகரணம் விநியோகம்!

மட்டக்களப்பு, ஜுன் 15

அரசாங்கத்தின் கிராமத்தினுடனான கலந்துரையாடல் 2020/2021 காலப்பகுதிக்கான வேலைத் திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை மேற்கு, வவுணதீவு பிரதேச செயலர் பிரிவில் உள்ள மீனவர்கள் மற்றும் விவசாயிகளுக்கு தமது தொழிலை மேம்படுத்துவதற்கான உபகரணங்கள் வழங்கும் நிகழ்வுகள் நேற்று முன் தினம் இடம்பெற்றன.

கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சி.சந்திரகாந்தனின் வேண்டுகோளின் பேரில் மண்முனை மேற்கு பிரதேசத்தைச் சேர்ந்த சுமார் 46 பயனாளிகளுக்கான உபகரணங்கள் இரண்டாம் கட்டமாக வழங்கப்பட்டன.

இதன்போது குறித்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 37 மீனவர்களுக்கான தோணிகள், விவசாயிகளுக்கான 8 நீர்ப் பம்பிகள் மற்றும் விவசாய நீர்ப்பாசனத்துக்கான குழாய்கள், இராசயன தெளிகருவி ஆகியன பயனாளிகளிடம் பகிர்ந்தளிக்கப்பட்டன.



பிரதேச செயலாளர் எஸ். சுதாகரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் செயலாளர் எஸ். பிரசாந்தன் கலந்துகொண்டு பயனாளிகளுக்கான தொழில் உபகரணங்களை வழங்கினார்.

பிரதேச செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் எஸ். சபேசன் உட்பட அதிகாரிகள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வாழைச்சேனை மாணவி தேசிய போட்டிக்கு தெரிவு



மட்டக்களப்பு, ஜுன் 15

வாழைச்சேனை ஆயிஷா மகளிர் மகா வித்தியாலய மாணவி எம்.என்.சீரத் லத்பா கணித ஒலிம்பியாட் போட்டி தேசிய மட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளதாக பாடசாலை அதிபர் என்.சஹாப்தீன் தெரிவித்தார்.

தரம் 7 இல் கல்வி கற்று வரும் சீரத் லத்பாவுக்கான தேசிய மட்ட கணித ஒலிம்பியாட் போட்டி எதிர்வரும் ஜுலை மாதம் 23 ஆம் திகதி நடைபெறவுள்ளது. (அ)

# 86 போத்தல் கசிப்புடன் பெண் ஒருவர் கைது

மட்டக்களப்பு, ஜுன் 15

காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள ஆரையம் பகுதியில் சட்டவிரோத கசிப்பு வியாபாரத்தில் ஈடுபட்ட பெண் ஒருவரை கைது செய்ததுடன் 86 கசிப்பு போத்தல்கள் மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மாவட்ட புலனாய்வுப் பிரிவினரும் பொலிஸாரும் இணைந்து ஆரையம்பதி சிகரம் பிரதேசத்திலுள்ள கசிப்பு விற்பனை நிலையத்தை கடந்த செவ்வாய்க்கிழமை முற்றுகையிட்டனர். இதன்போது அங்கிருந்து 86 போத்தல் கொண்ட 63 ஆயிரத்து 500 மில்லி லீற்றர் கசிப்பை மீட்டதுடன் வியாபாரத்தில் ஈடுபட்ட 49 வயதுடைய பெண் ஒருவரை கைது செய்தனர். (அ)

# கிழக்கு மாகாண சுற்றுலா பணியக பணிப்பாளராக மதன் நியமனம்!




திருமலை, ஜுன் 15

கிழக்கு மாகாண சுற்றுலாப் பணியகத்தின் பணிப்பாளராக ஊடகவியலாளர் ஏ.மதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் குறித்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

அவர் நேற்று உத்தியோக பூர்வமாக பதவியேற்றார். (அ)

# இந்திய ஊடகவியலாளரை நாட்டைவிட்டு வெளியேறுமாறு உத்தரவிட்டது சீன அரசு!

பீஜிங், ஜூன் 15

சீனாவில் பணிபுரியும் கடைசி இந்திய ஊடகவியலாளரும் இம்மாத இறுதிக்குள் வெளியேறுமாறு அந்நாட்டு அரசு உத்தரவிட்டுள்ளது.

இந்த ஆண்டு தொடக்கத்தில் நான்கு இந்திய பத்திரிகையாளர்கள் தங்களது நிறுவனங்கள் சார்பில் சீனாவில் செய்தி சேகரிக்க சென்றிருந்தனர்.

இதில் மூவரின் வீசா காலாவதியானதை அடுத்து, அவர்களது விசாவை புதுப்பிக்க சீன அரசு மறுத்துவிட்டது.

அதனால் கடந்த மாத இறுதியில் அவர்கள் சீனாவை விட்டு வெளியேறினர்.

பி.ரி.ஐ செய்தியாளர் மட்டும் சீனாவில் தங்கியிருந்த நிலையில், தற்போது அவரையும் இம்மாத இறுதிக்குள் வெளியேற உத்தரவு பிறப்பித்துள்ளது அந்நாட்டு அரசு.

முன்னதாக, “இந்தியாவில் பணியாற்றும் சீன பத்திரிகையாளர்களை இந்திய அரசு பாகுபாட்டுடனும், நியாயமற்ற முறையிலும் நடத்துகிறது” என்று அந்நாட்டின் வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் வாங் வென்பின் குற்றம் சுமத்தினர்.

மேலும், ஹஹதற்போது, இந்தியாவில் ஒரேயொரு சீனப் பத்திரிகையாளர் மட்டுமே எஞ்சியிருக்கிறார். அவரும் விசா நீடிப்புக்காக காத்திருக்கிறார். முன்னதாக, நடப்பு ஆண்டின் தொடக்கத்தில் சின்ஹூவா நியூஸ் ஏஜென்சி, சைனா சென்ட்ரல் ரெலிவிஷன் ஆகிய நிறுவனத்தின் ஊடகவியலாளர்கள் விஸா கோரி விண்ணப்பித்திருந்த நிலையில், அதனை இந்திய அரசு அனுமதிக்கவில்லை.

2020 முதல் சீன ஊடகவியலாளர்களின் விஸாக்கள் இந்தியாவால் அங்கீகரிக்கப்படவில்லை. இதன் விளைவாக 14 என்ற எண்ணிக்கையில் சீன நிருபர்கள், தற்போது ஒரேயொரு நபராக குறைந்துள்ளது என்றும் வாங் வென்பின் குற்றம்சாட்டினார்.

சீனாவின் இந்தக் குற்றச்சாட்டை மறுத்துள்ள இந்தியா, “சீன நிருபர்கள் எந்த சிரமமும் இல்லாமல் இந்தியாவில் செயல்பட்டு வருகின்றனர். ஆனால், சீனாவில் உள்ள இந்திய பத்திரிகையாளர்களுக்கு அந்த சுதந்திரம் இல்லை.

கடந்த மாதம், ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (எஸ்சிஓ) வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்திற்கு வருகை தந்த சீன நிருபர்களுக்கு இந்தியா தற்காலிக வீஸா அனுமதி அளித்தது.

அனைத்து வெளிநாட்டு ஊடகவியலாளர்களையும் நாட்டிற்குள் செயல்பட இந்தியா அனுமதித்தது. இதேபோல், சீனாவும் இந்திய பத்திரிகையாளர்களையும் அங்கு அனுமதிக்கும் என்று எதிர்ப்பார்க்கிறோம்” என்று இந்திய வெளியுறவுத் துறை தெரிவித்துள்ளது. (அ)

# குற்றச்சாட்டுக்களை நிராகரித்தார் ட்ரம்ப்



நியூயோர்க், ஜூன் 15

அரச ஆவணங்களை இரகசியமாக கையாண்டமை தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனல்ட் ட்ரம்ப் நிராகரித்துள்ளார்.

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி கடந்த 2020 ஆம் ஆண்டு, வெள்ளை மாளிகையை விட்டு வெளியேறிய பின்னரும், இரகசிய ஆவணங்களைக் கையாண்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய குறித்த வழக்கில், டொனால்ட் ட்ரம்ப் மீது 37 குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அமெரிக்காவின் அணு சக்தி திட்டங்கள், அமெரிக்கா மற்றும் வெளிநாடுகளின் பாதுகாப்பு, ஆயுத திறன்கள், இராணுவ தாக்குதலுக்கு அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகளின் சாத்தியக் கூறுகள், வெளிநாட்டு தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் திட்டம் ஆகியவை தொடர்பாக இரகசிய ஆவணங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக முன்னதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

எவ்வாறிருப்பினும், குறித்த குற்றச்சாட்டுக்களை அவர் நிராகரித்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

# மின்சார வாகனங்கள் மீது கவனம் செலுத்தும் டொயோட்டா நிறுவனம்



லண்டன், ஜூன் 15

டொயோட்டா நிறுவனம் தனது மின்சார வாகனங்களை மேலும் மேம்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

உற்பத்திச் செலவைக் குறைத்து, அதன் மின்சார வாகனங்களின் செயல்திறனை மேலும் மேம்படுத்தும் என்று நம்புவதாக டொயோட்டா தெரிவித்துள்ளது.

அந்த வாகனங்களுக்கு மேம்படுத்தப்பட்ட மின்கலங்களை அறிமுகப்படுத்தும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது மின்சார வாகனங்களுக்கு உலகில் கடும் போட்டி நிலவுகிறது, மேலும் இந்த போட்டியில் டொயோட்டாவும் இணைய முயற்சிப்பதாக விமர்சகர்கள் கூறுகின்றனர்.

எவ்வாறாயினும், உலகின் மின்சார வாகன சந்தையில் டெஸ்லா முன்னணியில் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# திருமணத்துக்கு சென்ற 103 பேர் படகு விபத்தில் பரிதாப மரணம்!

## நைஜீரியாவில் பெரும் துயரம்

அபுஜா, ஜூன் 15

**நைஜீரியாவின் வடக்கு நைஜர் மாகாணத்தில் உள்ள எக்போடி கிராமத்தில் ஏற்பட்ட படகு விபத்தில் சிறுவர்கள் உள்ளிட்ட 103 பேர் உயிரிழந்துள்ளனர்.**



நேற்று முன் தினம் அதிகாலை 3 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மேலும், திருமண நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றுள்ள நிலையில், சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து பலர் இதில் பங்கேற்றனர்.

திருமணம் முடிந்து 300 இற்கும் மேற்பட்டோர் ஒரு படகில் திரும்பிக் கொண்டிருந்தவேளை, அதிக எடை காரணமாக படகு திடிரென ஆற்றில் கவிழ்ந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

அந்த படகில் பயணித்தவர்கள் தங்களது மோட்டர் சைக்கிளையும் எடுத்து வந்திருந்திருந்ததாகவும் அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அப்போது, இந்த விபத்தில் சிறுவர்கள் உள்ளிட்ட 103 பேர் பரிதாபமாக பலியாகினர்.

தகவலறிந்து வந்த மீட்புக் குழுவினர் 100 இற்கு மேற்பட்டோரை மீட்டுள்ளனர்.

மேலும், பலர் காணாமல் போயுள்ள நிலையில், அவர்களை தொடர்த்தும் தேடி வரும் பணிகளில் மீட்புப் பணியினர் ஈடுபட்டுள்ளனர்.

திருமணத்துக்கு சென்று விட்டு ஊர் திரும்பிய மக்கள் படகு கவிழ்ந்த விபத்தில் பலியானது அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது. (அ)

# மேற்குவங்க முதல்வருக்கு மாம்பழங்களை பரிசாக அனுப்பினார் பங்களாதேஷ் பிரதமர்

டாக்கா, ஜூன் 15

இந்தியாவின் மேற்கு வங்க மாநில முதல்வர் மம்தா பானர்ஜிக்கு பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா பரிசு ஒன்றை அனுப்பியுள்ளார்.

600 கிலோ மாம்பழங்களை அவர் பரிசாக அனுப்பியுள்ளார். ஹிமாசாகர் மற்றும் லாங்க்ரா வகை மாம்பழங்கள் பரிசாக அனுப்பப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஆண்டும் இதேபோன்ற பரிசு வழங்கப்பட்டதை பங்களாதேஷ் துணை தூதுவர் தெரிவித்தார்.

இராஜதந்திர உறவுகளின் ஒரு அங்கமாகவே இந்த மாம்பழங்கள் பரிசாக அனுப்பப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



மம்தா பானர்ஜிக்கு மாத்திரமின்றி ஷேக் ஹசீனா இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களில் முதல்வர்களுக்கு மாம்பழங்களை பரிசாக அனுப்பியுள்ளார்.

கடந்த ஆண்டு, இந்திய பிரதமர் நரேந்திர மோடி, மம்தா பானர்ஜி, திரிபுரா மற்றும் அசாம் முதல்வர்களுக்கு மாம்பழங்கள் பரிசாக வழங்கப்பட்டன.

மேற்கு வங்கம் மற்றும் பங்களாதேஷ் மக்கள் வங்க மொழியை தாய்மொழியாக கொண்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# கனடா பாடசாலைக்கு வெடிகுண்டு மிரட்டல்!

## வீட்டிற்கு அனுப்பப்பட்ட மாணவர்கள்

ரொறன்றோ, ஜூன் 15

வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டதை அடுத்து கனடாவின் நோர்த் யோர்க் உயர்நிலைப் பாடசாலையில் இருந்து மாணவர்கள் வீட்டுக்கு அனுப்பப்பட்டனர்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை 9:30 மணிக்குப் பிறகு ஜார்ஜஸ் வானியர் மேல்நிலைப் பாடசாலைக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டதாக ரொறன்றோ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த பாடசாலை டான் மில்ஸ் சாலை மற்றும் வான் ஹார்ன் அவென்யூ பகுதியில் அமைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், பாதுகாப்பு கருதி குறித்த பாடசாலை மூடப்பட்டு மாணவர்கள் வீட்டிற்கு அனுப்பப்பட்டதாக ரொறன்றோ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ரொறன்றோ மாவட்ட பாடசாலை பேரவை இந்த அச்சுறுத்தல் நம்பகமானது என்று நம்புவதற்கு எந்த காரணமும் இல்லை என்று தெரிவித்துள்ளது.

இந்நிலையில், சம்பவம் தொடர்பில் அந்நாட்டு அதிகாரிகள் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)



### ஒருநாள் உலகக் கிண்ணம்:
## நியூசி. அணியிலிருந்து பிரெஸ்வெல் விலகல்

வெலிங்டன், ஜூன் 15

ஒருநாள் உலகக் கிண்ணத் தொடரில் இருந்து நியூசிலாந்து அணியின் சகலதுறை வீரர் மைக்கல் பிரேஸ்வெல் விலகியுள்ளார்.

இந்தியாவில் எதிர்வரும் ஒக்ரோபர் - நவம்பர் மாதங்களில் நடைபெறவிருக்கும் ஒரு நாள் உலகக் கிண்ணத் தொடர் நடக்கிறது.

இதில், பங்கேற்கும் நியூசிலாந்து அணிக்காக விளையாடிவரும் சகலதுறை வீரரான மைக்கல் பிரேஸ்வெல் தசைநார் சிதைந்ததால் தொடரிலிருந்து விலகியுள்ளார். இது அந்த அணிக்கு பின்னடைவாகப் பார்க்கப்படுகின்றது.

இந்நிலையில் பிரேஸ்வெல் அறுவை சிகிச்சைக்காக இங்கிலாந்துக்கு செல்கிறார். அதன் பிறகு அவர் நீண்ட நாள் ஓய்வு எடுக்க வேண்டியிருக்கும். அதனால் இந்தியாவில் நடக்கவிருக்கும் ஒருநாள் உலகக் கிண்ணத் தொடரை அவர் தவறவிடுவார்.

ஐ. பி. எல். போட்டியின் போது நியூசிலாந்து அணியின் தலைவரான கேன் வில்லியம்சனுக்கு வலது முழங்காலில் காயம் ஏற்பட்டது. அதனை தொடர்ந்து இரண்டு மாதங்களுக்குப் பிறகு பிரேஸ்வெல்லுக்கு காயம் ஏற்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 39 வருடங்களின் பின்னர் ஆஸி. வீரர்கள் சாதனை!







டுபாய், ஜூன் 15

அவுஸ்திரேலியாவை சேர்ந்த 3 கிரிக்கெட் வீரர்கள் ஐ. சி. சி. தரவரிசையில் முதல் மூன்று இடங்களை பிடித்துள்ளனர். உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டியில் இந்திய அணியை பெற்றி பெற்றது.

இந்த டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டியில் நன்றாக விளையாடியதால் ஸ்மித், ஹெட் தரவரிசையில் முன்னேறியுள்ளார்கள். மோர்னஸ் லபுஷான் தொடர்ந்து முதலிடத்தில் உள்ளார்.

ஒரே அணியை சேர்ந்த மூன்று பேர் டெஸ்ட் தரவரிசையில் முதலிடத்தில் இருக்கிறார்கள். இதற்கு முன் மேற்கிந்திய தீவுகள் அணியை சேர்ந்த கோர்டன் கிரீனிக், கிளைவ் லொய்ட், லொரி கோம்ஸ் 1984 டிசெம்பரில் முதல் மூன்று இடங்களை பிடித்திருந்தனர். 39 வருடங்களுக்குப் பிறகு அவுஸ்திரேலிய அணி வீரர்கள் இந்த சாதனையை நிகழ்த்தியுள்ளனர்.

டெஸ்ட் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசையில் மோர்னஸ் லபுஷான் - 903 புள்ளிகள், ஸ்ரீவ் ஸ்மித் - 885 புள்ளிகள், டிராவிஸ் ஹெட்- 884 புள்ளிகள், கேன் வில்லியம்சன் - 883 புள்ளிகள், பாபர் அஸாம் - 862 புள்ளிகளுடன் முதல் ஐந்து இடங்களில் உள்ளனர். (ஐ)

# மேற்கிந்தியாவுனான தொடரின் பின்னர் ரோஹித்தின் பதவி பறிக்கப்பட வாய்ப்பு

புதுடில்லி, ஜூன் 15

தொடர் தோல்விகளை அடுத்து இந்திய அணியின் தலைமைப் பதவி ரோஹித் சர்மாவிடம் இருந்து பறிக்கப்படும் என்று அறிய வருகின்றது. எனினும், மேற்கிந்தியத் தீவுகளுடனான தொடர் இதனைத் தீர்மானிக்கும் என்றும் கூறப்படுகின்றது.

லண்டன் ஓவல் மைதானத்தில் சமீபத்தில் நடந்த உலக டெஸ்ட் சம்பியன்ஷின் இறுதிப் போட்டியில் இந்திய அணி 209 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலியாவிடம் தோற்று கிண்ணத்தை இழந்தது.

கடந்த 10 ஆண்டுகளாக இந்திய அணியால் ஐ.சி.சி. போட்டிகளில்



கிண்ணத்தை வெல்ல முடியவில்லை. இந்த தோல்வியால் இந்திய அணியின் தலைவர் ரோஹித் சர்மா கடும் விமர்சனத்துக்கு உள்ளாகியுள்ளார்.

11 பேர் கொண்ட அணியில் அஸ்வினை சேர்க்காதது மற்றும் இந்திய வீரர்கள் செயல்பாடு போன்றவற்றால் அவரும், பயிற்றுவிப்பாளர் ராகுல் டிராவிட்டும் விமர்சனத்தை சந்தித்து வருகிறார்கள். இந்திய அணி அடுத்து மேற்கிந்தியத் தீவுகளுக்கு அடுத்த மாதம் சுற்றுப் பயணம் செய்து 2 டெஸ்ட், 3 ஒரு நாள் போட்டி, ஐந்து 20 ஓவர் ஆட்டத்தில் விளையாடுகிறது.

இந்த நிலையில், மேற்கிந்திய பயணத்துக்கு பிறகு அணித் தலைவர் பதவியில் இருந்து ரோஹித் சர்மா நீக்கப்படுவார் என்று தகவல் வெளியாகியுள்ளது. மேற்கிந்தியத் தீவுகள் தொடரில் அவரின் செயல்பாட்டை பொறுத்து அணித் தலைவர் பதவியின் தலைவிதி நிர்ணயிக்கப்படும் - என்றும் அறிய வருகின்றது.(ஐ)



## ஒருநாள் உலகக் கிண்ணத்தில் வித்தியாசமாக விளையாடுவோம்!
### ரோஹித் சர்மா சொல்கிறார்

புதுடில்லி, ஜூன் 15

இந்தியா - அவுஸ்திரேலியா அணிகள் மோதிய உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டியில் இந்திய அணி தோல்வியடைந்தது. இந்நிலையில், வரவிருக்கும் ஒருநாள் உலக கிண்ணத் தொடரில் வித்தியாசமாக விளையாட முயற்சி செய்வோம் என்று அந்த அணியின் தலைவர் ரோஹித் சர்மா கூறியுள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது:- ஒக்ரோபரில் நடக்கவிருக்கும் உலகக் கிண்ணத் தொடரில் முற்றிலும் மாறுபட்ட மனநிலையுடனும் அணுகுமுறையுடன் களமிறங்குவோம். நாங்கள் வித்தியாசமான முறையில் விளையாட முயற்சி செய்வோம். வீரர்கள் போட்டியில் வெற்றி பெற வேண்டும் என்ற அழுத்தத்துடன் விளையாட வேண்டாம். வித்தியாசமாக கொடுக்க வேண்டும் என முயற்சிப்போம்.

இந்த போட்டி முக்கியம். இந்தத் தொடர் முக்கியம் என நினைத்து விளையாடுகிறோம். ஆனால், எதுவும் சரியாக நடக்கவில்லை. எனவே, இந்த உலகக் கிண்ணத் தொடரில் நாம் வித்தியாசமாக சிந்தித்து செயல்படுவோம். எங்களின் முழுக்கவனமும் வித்தியாசமாக ஏதாவது செய்ய முயற்சிப்பதில் இருக்கும் - என்றார். (ஐ)

# மன்செஸ்டர் சிற்றி வீரர்களுக்கு 2 இலட்சம் பேர் திரண்டு வரவேற்பு



மன்செஸ்டர், ஜூன் 15

கழக அணிக்கான ஐரோப்பிய சம்பியன்ஸ் லீக் இறுதிப் போட்டியில் மன்செஸ்டர் சிற்றி வெற்றி பெற்றது.

ஐரோப்பிய சம்பியன்ஸ் லீக் பட்டத்தை மன்செஸ்டர் சிற்றி வெல்வது இதுவே முதல் முறையாகும். இந்தத் தொடரில் பிறீமியர் லீக், எவ். ஏ. கிண்ணங்களையும் மன்செஸ்டர் சிற்றி கைப்பற்றியது.

இந்நிலையில் ஐரோப்பிய சம்பியன்ஸ் லீக் உதைபந்தாட்ட தொடரில் 3ஆவது முறையாக கிண்ணத்தைவென்ற மன்செஸ்டர் சிற்றி வீரர்களை 2 இலட்சத்துக்கும் அதிகமான ரசிகர்கள் வழிநெடுக திரண்டு வரவேற்றனர். (ஐ)

# கறுவா பயிர்ச் செய்கை; இரண்டாவது செயலமர்வு

யாழ்ப்பாணம், ஜூன் 15

வடபகுதியில் கறுவா பயிர்ச் செய்கை குறித்த மற்றொரு செயலமர்வு நாளை வெள்ளிக்கிழமை மருதனார்மடம் சந்தியில் உள்ள யாழ்ப்பாணக் கல்லூரியின் விவசாயப் பீடத்தில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணிவரை நடைபெறவுள்ளது.

கடந்த மாதம் வட்டுக்கோட்டையில் நடைபெற்ற செயலமர்வில் பங்குகொண்டு பலன்பெற முடியாதவர்களின் நலன் கருதியும், பலருடைய வேண்டுகோளையடுத்தும் இந்த இரண்டாவது செயலமர்வு மருதனார் மடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது என இதனை ஏற்பாடு செய்த புவனகுமார் தெரிவித்தார்.

கறுவாச் செய்கையை வீட்டுத் தோட்டமாக சிறியளவிலோ பெரியளவிலோ செய்வதற்கு ஆர்வமுள்ளவர்கள் யாரும் இந்த செயலமர்வில் பங்குகொண்டு பயனடைய முடியும் என்றும் புவனகுமார் தெரிவித்தார்.

வடபகுதி மக்களுக்கு இது ஒரு சிறந்த வாய்ப்பு என்பதால், இந்த சந்தர்ப்பத்தை அவர்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்தார்.

கறுவா பட்டையிலிருந்து பெறுமதி சேர் உற்பத்திகள் பலவற்றையும் மேற்கொள்ள முடியும். அவை தொடர்பாகவும் இங்கு விளக்கமும் பயிற்சியும் வழங்கப்படும். பெறுமதி சேர் உற்பத்திகளும் ஏற்றுமதிக்கான வாய்ப்புக்கள் அதிகமாகவுள்ளவை என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்த உற்பத்திகளையும் செயலமர்வின்போது பார்வையிட முடியும்.

கறுவா ஆராய்ச்சி நிலையத்தின் ஆய்வாளர்ளும் இதில் கலந்துகொண்டு கறுவா உற்பத்தி தொடர்பான விளக்கங்களை வழங்குவார்கள். (அ)

# ஓட்டோவில் இரு பிள்ளைகளை கைவிட்டுச் சென்றார் தாயார்!

கொழும்பு, ஜூன் 15

தாயொருவர் தனது 9 வயது மகனையும் 6 மாத கைக்குழந்தையையும் முச்சக்கரவண்டியில் கைவிட்டுச் சென்ற சம்பவம் ஒன்று காலி - அம்பலாங்கொடையில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

பெண்ணொருவர் தம்மிடம் வந்து 2 பிள்ளைகளை கொடுத்து சிறிது நேரம் பார்த்துக்கொள்ளுமாறு கூறிச் சென்றார் என்றும், நீண்ட நேரமாகியும் குறித்த பெண் திரும்பி வராததால் பிள்ளைகளை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்க தாம் வந்தார் எனவும் முச்சக்கரவண்டிச் சாரதி பொலிஸாரிடம் கூறியுள்ளார்.

இதனையடுத்து விசாரணை நடத்திய அம்பலாங்கொடை பொலிஸார் தாய்ப்பாலின்றி பாதிக்கப்பட்ட 6 மாத கைக்குழந்தையை பலப்பிட்டி ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ப்பித்தனர்.

நேற்று முன்தினம் இரு பிள்ளைகளும் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். இதன்போது, இருவரையும் காப்பகத்தில் சேர்க்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

பிள்ளைகளை கைவிட்டு சென்ற தாய் போதைப் பொருளுக்கு அடிமையானவர் எனவும் அவரை உடனடியாக கைது செய்யுமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதாகவும் அம்பலாங்கொடை பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# நவாலி பகுதியில் வாள்வெட்டு இருவர் வைத்தியசாலையில்

யாழ்ப்பாணம், ஜூன் 15

நவாலி பகுதியில் வாள்வெட்டுக் குழுவினர் தாக்குதல் நடத்தியதில் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

நேற்று முன் தினம் இரவு 9.40 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றது.

மோட்டார் சைக்கிள்களில் வந்த கும்பல் ஒன்று, நவாலி வடக்கு திருச்சபை வீதியில் வைத்து இரண்டு இளைஞர்கள் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்திவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றது.

அதன் பின்னர் காயமடைந்த இருவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# இலங்கைக்கு இந்தியாவின் ஒத்துழைப்பு மிக அவசியம்

## அமெரிக்கா வலியுறுத்தல்



நியூயோர்க், ஜூன் 15

**இலங்கையில் தற்போதுள்ள நெருக்கடி நிலைக்கு இந்தியாவின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமானதென அமெரிக்காவின் திறைசேரியின் செயலாளர் ஜனெட் ஜெலென் குறிப்பிட்டார்.**

அத்துடன், இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு இந்தியாவும் அமெரிக்காவும் இணைந்து செயற்படவேண்டியதும் அவசியம் எனவும் அவர் வலியுறுத்தினார்.

அத்துடன் இலங்கையின் நடவடிக்கைகளை அவதானித்து வருவதுடன், கடந்த ஆறு மாதங்களில் பல்வேறு விடயங்களில் முன்னேற்றகரமான செயற்பாடுகளை இலங்கை முன்னெடுத்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் மூன்றாம் உலக நாடுகள் எதிர்கொள்ளும் கடன் அச்சுறுத்தல் பொருளாதாரத்துக்கும் ஸ்திரத்தன்மைக்கும் பாதிப்பை ஏற்படுத்திவருவதுடன், இலங்கை போன்ற நாடுகளுக்கு உரிய தருணத்தில் முழுமையான கடன் நிவாரணங்களை வழங்குவதற்கு மேலும் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்குத் தீர்மானித்துள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# சிமெந்து விலையை குறைக்கவேண்டும்

கொழும்பு, ஜூன் 15

சிமெந்து உள்ளிட்ட கட்டட நிர்மாணத்துறைசார் பொருட்களின் விலையை 25 சதவீதத்தினால் குறைக்க வேண்டும் என நிர்மாணத்துறை வல்லுநர்கள் சபையின் தலைவர் நிஷாந்த விக்ரமசிங்க தெரிவித்தார்.

டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி வலுவடைந்துள்ள நிலையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

விலை குறைக்கப்படாமையால், உற்பத்தியாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்கள் பாரிய அளவில் இலாபம் ஈட்டுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

விலை அதிகரிப்பின் காரணமாக, தரமற்ற கம்பிகள் மற்றும் வர்ணப் பூச்சுகள் என்பன சந்தையில் விற்பனை செய்யப்படுவதாகவும் நிஷாந்த விக்ரமசிங்க தெரிவித்தார். (அ)

# 8 இலட்சம் லைசன்ஸ்களை தனியாரிடம் அச்சிட முடிவு

கொழும்பு, ஜூன் 15

நாட்டில் தனியாரிடம் இருந்து சுமார் 8 இலட்சம் சாரதி அனுமதிப்பத்திர அட்டைகளை அச்சிட முடிவு செய்யப்பட்டுள்ளதாக மோட்டார் போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

திணைக்களத்தில் உள்ள அச்சுப்பொறிகளின் திறன் போதிய அளவில் இல்லாததால் சாரதி அனுமதிப்பத்திரம் விநியோகிப்பதில் பல மாதங்களாக தாமதம் ஏற்பட்டுள்ளதாக மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிஷாந்த அநுருத்த வீரசிங்க தெரிவித்தார்.

சுமார் 20 கோடி ரூபாவை செலவிட்டு புதிய இயந்திரங்களை கொள்வனவு செய்ய முடியாத காரணத்தினால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் கணினி அமைப்புக்கு பொறுப்பான நிறுவனத்திடம் இருந்து அட்டையை அச்சிட்டு பெற்று ஒரு அட்டைக்கும் 150 ரூபா வீதம் செலுத்தும் ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத் தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டு நினைவிடத்துக்கு அடிக்கல்



யாழ்ப்பாணம், ஜூன் 15

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டு விழாவை அடையாளப்படுத்து முகமாக நூற்றாண்டு நினைவிடம் ஒன்று அமைக்கப்பட உள்ளது.

இதற்கான அத்திவாரம் இடும் நிகழ்வு கலாசாலையின் அதிபர் தலைமையில் நேற்றுக் காலை 9.30 மணிக்கு இடம்பெற்றது.

இந் நிகழ்வில் கலாசாலையின் முன்னாள் விரிவுரையாளரும் கோப்பாய் நவமங்கை நிவாச நிறுவுனருமாகிய சுவர்ணா நவரத்தினம் நினைவிடத்திற்கான அடிக்கல்லை நாட்டினார்.

இந்நினைவிடம் அவரது உபயமாக அமைய இருப்பது குறிப்பிடத்தக்கது. (அ)


# மருத்துவத்தில் கின்னஸ் சாதனை படைத்தது இலங்கை இராணுவம்!

கொழும்பு, ஜூன் 15

உலகின் மிகப்பெரிய மற்றும் கனமான சிறுநீரகக் கல்லை பாரிய சத்திரசிகிச்சை மூலம் அகற்றும் நடவடிக்கையை வெற்றிகரமாக மேற்கொண்டு கின்னஸ் உலக சாதனையில் இடம்பிடித்துள்ளதாக இலங்கை இராணுவம் தெரிவித்துள்ளது.

2023 ஜூன் முதலாம் திகதி கொழும்பு இராணுவ மருத்துவமனையில் அந்த சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

சிறுநீரக மருத்துவர், லெப்டினன்ட் கேணல் கே. சுதர்ஷன் தலைமையில் இந்த செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.



கொழும்பு இராணுவ மருத்துவமனையில் ஜூன் முதலாம் திகதி இராணுவ மருத்துவர்களால் அகற்றப்பட்ட சிறுநீரக்கல் 13.372 செ.மீ நீளமும் 801 கிராம் எடையும் கொண்டது.

தற்போதுள்ள கின்னஸ் உலக சாதனைகளின்படி, உலகில் கண்டறியப்பட்ட மிகப்பெரிய சிறுநீரகக் கல் 13 சென்றிமீற்றர், 2004 இல் இந்தியாவிலும், அதிக நிறையான 620 கிராம் சிறுநீரகக் கல் 2008 இல் பாகிஸ் தானிலும் கண்டறியப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

## முதலாவது...

இந்த பயணிகள் கப்பல் சேவை பரீட்சார்த்த முயற்சியாகவே நடத்தப்படுகின்றது. இதனால், முதல் பயணிகள் கப்பல் சென்னையிலிருந்தே காங்கேசன் துறையை வந்தடையும். அத்துடன், நூற்றுக்கும் மேற்பட்ட பயணிகள் வருகை தருவர் என்றும் தெரிய வருகின்றது. (ஐ)

## அத்தியாவசிய...

பொருட்கள் நன்கொடையாக வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சமூகத்தில் மிகவும் பாதிக்கப்படக்கூடிய பிரிவினருக்கு உதவ தன்னார்வத்துடன் செயல்படும் குறித்த நிறுவனத்தை பாராட்டிய பிரதமர், அவர்கள் நாட்டுக்கு அளித்து வரும் ஆதரவுக்கும் நன்றி தெரிவித்தார். (ஐ)

## சட்டவிரோத...

ஹெட்டியாராச்சி நேற்றைய தினம் மாவட்ட அரசாங்க அதிபரை சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது பேசப்பட்ட விடயங்கள் தொடர்பாக செய்தியாளர்களிடம் கருத்துரைத்தபோதே அரச அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இடம்பெறும் சட்ட விரோத செயல்பாடுகளை கட்டுப்படுத்த படைத்தரப்பின் ஒத்துழைப்பு மிகமிக அவசியம்.

காங்கேசன்துறை சிமெந்து கூட்டுத்தாபன காணியிலிருந்து இராணுவத்தினர் வெளியேறிய நிலையில் சிமெந்து கூட்டுத்தாபனத்துக்கு சொந்தமான பொருட்கள் களவாடப்படுகின்றன என்று பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இதனை தடுத்து நிறுத்துவதற்கு இராணுவத்தினர் ஒத்துழைக்க வேண்டும்.

இராணுவத்தினரின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்ட காணிகள் பல அளவீடு செய்யப்படாது பொதுமக்களிடம் கையளிக்கப்படாமல் உள்ளன. அவற்றை அளவீடு செய்ய சம்பந்தப்பட்ட திணைக்களம் நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இதற்கு இராணுவம் அதிகாரிகளுக்கு உதவ வேண்டும்.

மீள்குடியேறிய மக்களுக்கு 700இற்கும் மேற்பட்ட வீடுகள் இராணுவத்தினரின் பங்களிப்போடு கட்டி முடிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் காலத்திலும் மீள்குடியேறிய மக்களுக்கான வீட்டு தேவைகள் மற்றும் ஏனைய தேவைகளை பூர்த்தி செய்ய இராணுவத்தினர் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் - என்று தான் கேட்டார் என்று அரச அதிபர் தெரிவித்தார். (ஐ-03)

## நெதர்லாந்து...

நிலையில் அனுசன் அகிலன் நீரில் மூழ்கி காணாமல் போனார் என்று தெரிவிக்கப்படுகிறது.

பிரான்ஸின் லூ ஹாவ் நகரில் இருந்த சென்றிருந்த நண்பர்களில் ஒருவர் நீரேரியில் சிக்குண்டவேளை அவரை மீட்டுப் பாதுகாப்பாக வெளியேற்ற முயன்ற சமயத்திலேயே அனுசன் அகிலன் நீரில் மூழ்கிக் காணாமல் போனார் என்று சம்பவத்தை நேரில் கண்டவர்கள் கூறியிருக்கின்றனர்.

ஏரியில் மீட்புப் பணியாளர்கள் நீண்ட நேரம் தேடுதல் நடத்தியதில் அவர் கண்டுபிடிக்கப்பட்டார். கரைக்கு கொண்டுவரப்பட்ட அவருக்கு முதலுதவி அளிக்கப்பட்ட போதும் அவரின் உயிரைக் காப்பாற்ற முடியவில்லை என்று மீட்பு பிரிவினர் தெரிவித்தனர்.

இதேவேளை, பிரான்ஸில் இருந்து சென்று நீரில் மூழ்கிய 25 வயதான மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். அவர் குறித்த விவரங்கள் தெரிய வரவில்லை. (ஐ)

## படலை...

பொது மருத்துவமனையில் பிரேத பரிசோதனைகள் இடம்பெற்ற பின்னர் குழந்தையின் சடலம் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ)

## ஜனாதிபதியின்...

சொத்துகளை மாற்றுவதற்கு அதிகாரம் இல்லை.

தமிழ் அரசியல்வாதிகளின் வேண்டுகோளுக்கு இணங்க மூன்றாவது தடவையாக 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார். முழுமையாக நடைமுறைப்படுத்தினால் முரண்பாடுகள் எழலாம் என்பதற்காக பகுதி பகுதியாக அதனை செயல்படுத்த ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதற்கமைவாக முதலில் காணி அதிகாரத்தை பெற்றுக்கொடுக்கவும் அடுத்து, பொலிஸ் அதிகாரத்தை பெற்றுக்கொடுக்கவும் தமிழ் அரசியல்வாதிகளுடன் ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளார். இதன் காரணமாக நல்லிணக்கம் சீர்குலைந்து வருவதாகவே உணர்கிறோம்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஜனாதிபதி பதவியை பெற்றுக் கொடுப்பதின் பின்னணியில் புலம்பெயர் தமிழரகள் இருந்தமை தெளிவாகிறது - என்றும் கூறியிருக்கிறார். (ஐ)

## ஜனாதிபதி...

கட்சித் தலைவர்கள் ஜனாதிபதியை சந்தித்துப் பேசினர்.

பிரதமர் தினேஷ் குணவர்த்தன, பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் எம். பி., அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா, ஜீவன் தொண்டமான், ஐக்கிய தேசிய கட்சியின் வஜிர அபேவர்த்தன எம். பி., ஏ. எல்.எம். அதாவுல்லா எம். பி. உள்ளிட்டவர்கள் இந்த சந்திப்பில் இடம் பெற்றிருந்தனர்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த பஸில் ராஜபக்ஷ,

சில தொழில்சங்கங்களும் தமது கட்சியைச் சேர்ந்த சில உள்ளூர் அரசியல் வாதிகளும் அரசாங்கத்தின் கொள்கைகள் தொடர்பில் முரண்பாடான நிலையில் கருத்து வெளியிடுகின்றனர். ஆனால் அந்த பிரச்னைகள் எதுவும் நாட்டைக் கட்டியெழுப்பு வதற்கு ஆதரவளிக்காத அளவுக்கு தீவிரமானவை அல்ல.

கலந்துரையாடல் மூலம் ஒன்றிணைந்து செயல்பட்டு எந்தவொரு பிரச்னைக்கும் தீர்வு காண முடியும். அதற்காக மாதத்தில் ஒரு நாள் ஜனாதிபதியை நேரில் சந்திப்பது அவசியமானது.

மேலும், தாம் உட்பட பொதுஜன பெரமுன கட்சி அண்மைக்கால வரலாற்றில் பல ஜனாதிபதிகளுடன் இணைந்து பணியாற்றியுள்ளோம். அந்த அனுபவத்தின்படி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் இதுவரை எந்தவொரு ஜனாதிபதியும் இல்லாத வகையில் ஒழுங்கமைக்கப்பட்ட மற்றும் செயல்பாட்டுப் பணியாளராக இருக்கிறார் - என்றார்.

இதனிடையே, கருத்து வெளியிட்ட பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர், “எவ்வாறாயினும் ஜனாதிபதியின் நாட்டைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்திற்கு கட்சி என்ற வகையில் நாம் இந்த ஆதரவை வழங்கியுள்ளோம். பொதுஜன பெரமுனவுடன் தொடர்புடைய ஏனைய கட்சிகளும் இதற்கு உடன்படுகின்றன. இப்படி மாதம் ஒருமுறை கூடி விவாதித்தால், உள்ளூார் அரசியல் தலைவர்கள் தெரிவிக்கும் சில ஆட்சேபனைகளை நமது தொழில்சங்கங்கள் சிலவற்றாலும் தீர்க்க முடியும். அத்துடன், தற்போது முன்னெடுக்கப்படும் இந்த செயல்பாடு களுக்கான எமது முன்மொழிவுகளையும் யோசனைகளையும் முன்வைக்க முடியும்.”, என்றார். (ஐ)

# மின்சார மோட்டார் சைக்கிள் யாழ்ப்பாணத்தில் அறிமுகம்




கொழும்பு, ஜூன் 15

நாட்டில் முதன்முறையாக சிங்கர் அறிமுகப்படுத்தும் ‘லிமா’ எனப்படும் மின்சாரத்தில் இயங்கும் மோட்டார் சைக்கிள் அறிமுக நிகழ்வு யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்றது.

அதிசிறந்த நம்பிக்கை மற்றும் பல உத்தரவாதங்களுடன் பல்வேறு புதிய பல வசதிகளுடன் வாடிக்கையாளரின் நன்மைகளை முதன்மைப்படுத்தி இந்த இலத்திரனியல் மோட்டார் சைக்கிள் அறிமுகம் நடைபெறுவதாக அந்த நிறுவனம் தெரிவித்தது.

இந்த நிகழ்வில், சிங்கர் நிறுவனத்தின் இலங்கைக்கான விற்பனை பிரதானி வஜிர தென்னக்கோன், வியாபார மேம்படுத்தல் முகாமையாளர் சுஜித் சிறீமன்னே, சிங்கர் நிதி நிறுவன திறைசேரி முகாமையாளர் திலான் ரூபசிங்ஹ ஆகியோர் பங்கேற்றனர்.

இந்த அறிமுக நிகழ்வில், முதல் மோட்டார் சைக்கிளை சிறீ நதியா நகையக உரிமையாளர் வாங்கினார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ-03)

# இளைஞர் கொலை சந்தேகநபர் கதிர்காமத்தில் கைதானார்!

கொழும்பு, ஜூன் 15

கடந்த மே 31ஆம் திகதி பாணந்துறை - வேகட பிரதே சத்தில் இளைஞன் ஒருவரை கூரிய ஆயுதத்தால் கொலை செய்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கதிர்காமம் பஸ் நிலையத் தில் நின்றிருந்த போதே சந்தேகநபர் செவ்வாய்க் கிழமை கைது செய்யப்பட்டாரென பொலிஸார் தெரிவித்தனர்.

பாணந்துறையில் உள்ள ஆடைத் தொழிற்சாலைக்கு முன்பாக இளைஞர் ஒருவர் வாள்வெட்டுத் தாக்குதலுக்கு இலக்காகிய நிலையில் அந்த இளைஞர் ஆடைத் தொழிற் சாலை வளாகத்துக்கு ஓடியுள் ளார்.

அவரைப் பின்தொடர்ந்த கொலையாளி அந்த இடத்துக்குள் நுழைந்து வாளால் அந்த இளைஞனை தாக்கியுள்ளார். இதனையடுத்து குறித்த இளை ஞர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். (ஐ)

## தீவிரமான...

உறுதிப்படுத்தும் நோக்கில் பல காரணிகளை கருத்தில்கொண்டு தீர்மானங்கள் எடுக்கப்பட்டன என்று தெரிவித்த அவர், “அந்நிய செலாவணி நெருக்கடி காரணமாக சுமார் 4,000 பொருள்களை இறக்குமதி செய்வதற்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. எவ்வாறாயினும், 3,000 க்கும் மேற்பட்ட பொருட்களின் இறக்குமதி கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுள்ளன.

ஏறக்குறைய 900 பொருட்களுக்கு மட்டுமே தற்போது இறக்குமதி கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. தன்னிச்சையான முடிவுகளை எடுக்க முடியாது மற்றும் கடந்த சில மாதங்களாக மேற்கொள்ளப்பட்ட நல்ல பணிகளை தவிர்க்க முடியாது.

அனைத்து முன்மொழிவுகளும் பரிந்துரைகளும் பரிசீலிப்படும். ஆனால், இலங்கை மத்திய வங்கியின் தீர்மானத்தின் அடிப்படையில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும்.

வாகன இறக்குமதி கட்டுப்பாடு சிலருக்கு ஏற்படுத்திய தாக்கம் குறித்து எங்களுக்கு புரிந்துணர்வு இருந்தாலும், ஒரு துறையின் நலன்களின் அடிப்படையில் அவர்களால் முடிவுகளை எடுக்க முடியாது.

தேசிய பொருளாதார மற்றும் பௌதிகத் திட்டங்கள் தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழுவின் போது அதிகாரிகள் பரிந்துரைத்தபடி, கடன் மறுசீரமைப்பு தொடர்பான உடன்படிக்கையை இலங்கை எட்டாததால், கடன் வரியின் கீழ் வாகனங்களை இறக்குமதி செய்வதில் தடைகள் ஏற்படும்” என்றார். (ஐ)

## 22பவுண்...

காலை எழுந்த அவர்கள் கைப்பையை காணவில்லை என்று தேடிய போதே நகைகள் களவு போனமை தெரியவந்தது.

இது குறித்து ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. யாழ்ப்பாணம் தடயவியல் பொலிஸார் சம்பவ இடத்துக்கு சென்று விசாரணைகளை நடத்தினர். மேலதிக விசாரணைகளை ஊர்காவற்றுறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## ஐ.தே.க....

தொடர்பில் எந்தப் பிரச்னையும் இல்லை. அவருக்கு ஆதரவாக பல அரசியல் குழுக்கள் இருக்கின்றன.

நாடு உறுதியான நிலையை எட்ட ரணில் விக்கிரமசிங்க 5 முதல் 10 ஆண்டுகளுக்கு ஜனாதிபதியாக இருக்க வேண்டும். இந்த திட்டத்தை நாம் முன்னெடுத்துச் செல்ல வேண்டும். அரசாங்கத்துக்கு ஆதரவாக பல அரசியல் கட்சிகள் உள்ளன. அந்த குழுக்கள் ஒன்றிணைந்தால் நாங்கள் தேர்தலை சந்திக்க முடியும். கூட்டணியாக,” என்றும் அவர் மேலும் கூறினார். (ஐ)

## 54இலட்சம்...

இதில், யாழ்ப்பாணத்தை சேர்ந்தவரான விஜயகாந்த் வியாஸ்காந்தை யாழ்ப்பாணம் கிங்ஸ் அணி 18 ஆயிரம் டொலர்களுக்கு வாங்கியது. இவர் தவிர, சரித் அசலங்கவை 80 ஆயிரம் டொலர்களுக்கு - சுமார் 2 கோடியே 40 இலட்சம் ரூபாய்க்கும் பாகிஸ்தானின் சொஹைப் மலிக் 50 ஆயிரம் டொலர்களுக்கும் யாழ்ப்பாணம் கிங்ஸ் அணியால் ஏலத்தில் எடுக்கப்பட்டனர்.

இதேவேளை, துஷ்மந்த சாமீரவை 72 ஆயிரம் டொலர்களுக்கு பி- லவ் கண்டி அணி ஏலத்தில் எடுத்தது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# ஆட்சியை தீர்மானிக்கும் சக்தியே மொட்டுக் கட்சி!

## நாமல் ராஜபக்ஷ பெருமிதம்



கொழும்பு, ஜூன் 15

**இலங்கையின் ஆட்சியைத் தீர்மானிக்கும் வல்லமை சிறிலங்கா பொதுஜன பெரமுனவுக்கே உண்டு என்று அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.**

**இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்-**

நாட்டில் அடுத்து நடைபெறும் எந்தவொரு தேர்தலாக இருந்தாலும் அதில் சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியே வெற்றி பெறும்.

சிறிலங்கா பொதுஜன பெரமுனவுக்கே மக்கள் ஆணை வழங்கினர். அந்த ஆணையை பாதுகாப்பதற்காகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் முடிவை எடுத்தோம்.

சிறிலங்கா பொதுஜன பெரமுன என்ற இடதுசாரி அரசியல் சக்தியைப் பாதுகாக்க வேண்டிய தேவையும் இருந்தது. மக்கள் ஆணையைக் காட்டிக்கொடுக்கும் வகையில் ஒருபோதும் செயற்படமாட்டோம் - என்றார். (அ)

# பஸ் கட்டணம் குறையும்

கொழும்பு, ஜூன் 15

ஜூலை 1 முதல் குறைந்தபட்ச பஸ் கட்டணம் உட்பட அனைத்து பஸ் கட்டணங்களையும் கிட்டத்தட்ட 20 வீதம் குறைப்பதற்கு போக்குவரத்து அமைச்சு திட்டமிட்டுள்ளது.

ஜூலை முதலாம் திகதி பஸ் கட்டணத்தை குறைக்கும் பொறுப்பு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன், 12 பிரிவுகள் தொடர்பான கணக்கீடுகளை ஆணைக்குழு மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி தற்போது 30 ரூபாவாக உள்ள குறைந்தபட்ச கட்டணம் உட்பட அனைத்து கட்டணங்களும் குறைக்கப்படலாம் எனவும் குறிப்பிடப்படுகின்றது. (அ)

# அநுரபிரியதர்சன யாப்பா உள்ளிட்ட சுயாதீன எம்.பிக்கள் சஜித் பக்கம்?

கொழும்பு, ஜூன் 15

பொதுஜன பெரமுனவில் போட்டியிட்டு பாராளுமன்றம் தெரிவாகி, தற்போது சுயாதீனமாக செயல்படும் பாராளுமன்ற உறுப்பினர்களில் சிலர் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணையவுள்ளனர்.

அடுத்த வாரமளவில் அவர்கள் இணையக்கூடும் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்களான அநுரபிரியதர்சன யாப்பா, சுதர்ஷினி பெர்ணான்டோபுள்ளே, ஜோன் செனவிரத்ன மற்றும் பிரியங்கர ஜயரத்ன ஆகியோரே, சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியில் இணையவுள்ளனர் எனத் தெரியவருகின்றது. (அ)

# ராஜபக்ஷக்களைப் பாதுகாக்கும் தரப்புடன் உறவு வைக்கமாட்டோம்!

## சஜித் பிரேமதாஸ உறுதி

அம்பாறை, ஜூன் 15

"ஐக்கிய மக்கள் சக்தி ஒரு புதிய கட்சியாகும். இது இந்த நாட்டின் பலமான மக்கள் சார் கட்சியாகும். எனவே, இந்த நாட்டை அழித்த ராஜபக்ஷக்களைப் பாதுகாக்கும் எந்தத் தரப்புடனும் எந்த விதமான உறவையும் ஐக்கிய மக்கள் சக்தி ஏற்படுத்தாது."

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அம்பாறையில் நடைபெற்ற கட்சி செயற்பாட்டாளர்களுடனான சந்திப்பில் உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போது வரிசைகள் இல்லை என்று பல நபர்கள் வீராப்பு பேசினாலும் 2019 இல் இருந்ததைப் போன்று எரிபொருள் உள்ளதா என நாம் வினவுகின்றோம். ஊட்டச்சத்தான உணவு இல்லாவிட்டாலும் தற்பெருமை பேசுவதை நிறுத்த முடியாது.



ஆட்சிக்கு வந்த இரண்டு மாதங்களிலேயே தனது நண்பர்களுக்கு பலகோடி வரிச்சலுகைகளை வழங்கிய தற்போதைய அரசு, வங்குரோத்தான நாடு இருந்ததை விட சிறப்பாக உள்ளது எனக் கூறுவது கேலிக்குரியது. வங்குரோத்து நிலைக்கும் பல்வேறு படி நிலையை அவர்களாகவே கொண்டுள்ளனர்- என்றார். (அ)

# ஓட்டோ கவிழ்ந்து விபத்து; சிறார்கள் 11 பேர் காயம்!

## கொழும்புத்துறையில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூன் 15

கொழும்புத்துறை-உதயபுரம் பகுதியில் ஓட்டோ ஒன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியது.

இந்த விபத்தில் சிக்கிய முன்பள்ளிச் சிறுவர்கள் 11பேர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஓட்டோச் சாரதியும் விபத்தில் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று புதன்கிழமை காலை முன்பள்ளிச் சிறுவர்களை அதிகளவில் ஏற்றிக்கொண்டு பயணித்த ஓட்டோவே கவிழ்ந்துள்ளது.

விபத்துச் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலி ஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# கட்டட வேலையில் ஈடுபட்ட இருவர் மின்சாரம் தாக்கி பலி!

## மட்டக்களப்பில் நேற்று துயரம்

மட்டக்களப்பு, ஜூன் 15

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அமிர்தகழி பகுதியில் மேசன் வேலையில் ஈடுபட்ட இருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளனர்.

நேற்றுக் காலை அமிர்தகழி கப்பலேந்திய மாதா கோவிலுக்கு அருகில் உள்ள வீடு ஒன்றிலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

வீடு ஒன்றில் நிர்மாணப்பணியின்போது பிரதான மின்சார இணைப்பில் தகடு இணைந்திருந்ததை கவனிக்காத நிலையில் அங்கு வேலையில் ஈடுபட்டிருந்த இருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் கூறினர்.

கவனயீனம் காரணமாக இடம்பெற்ற இந்த சம்பவத்தில் மட்டக்களப்பு இருதயபுரம் பகுதியைச் சேர்ந்த மேசன் வேலையில் ஈடுபடும் இருவரே உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களின் சடலங்கள் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான விசாரணைகளை மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# ஆட்சியைத் தீர்மானிப்பது கட்சியல்ல நாட்டு மக்களே!

## நாமலின் கருத்துக்கு மைத்திரி பதிலடி



கொழும்பு, ஜூன் 15

நாட்டில் தேர்தல் ஒன்று மிகவும் அவசியம் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி யின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன ஊடகங்களிடம் தெரிவித்தார்.

ஆட்சியைத் தீர்மானிக்கும் சக்தியினராக மக்களே உள்ளனர் என்றும், ஆட்சியைத் தீர்மானிக்கும் சக்தி கட்சியினருக்கு இல்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

மக்கள் ஆணை இன்றி எவரும் ஆட்சியமைக்க முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

எந்தவொரு தேர்தலையும் எதிர்கொள்வதற்கு சுதந்திரக் கட்சி தயார் என்றும் அதன் தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். (அ)

# பிரான்ஸ் ஜனாதிபதி ரணிலுக்கு அழைப்பு

கொழும்பு, ஜூன் 15

ஜூன் 22 மற்றும் 23 ஆம் திகதிகளில் பாரிஸில் நடைபெறவுள்ள புதிய பூகோள நிதி உடன்படிக்கைக்கான உலகளாவிய தலைவர்கள் உச்சி மாநாட்டின் உயர்மட்ட கலந்துரையாடல் குழுவில் உரையாற்றுவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் அழைப்பு விடுத்துள்ளார்.

இதனை இலங்கை ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

# பாராளுமன்றத்தை கலைப்பாரா ரணில்?

கொழும்பு, ஜூன் 15

பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத்தேர்தலுக்குச் செல்வது குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவதானம் செலுத்தியுள்ளார் என சிங்கள இணைய ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அரசாங்கத்தை முன்னெடுப்பதில் சிக்கல் நிலை ஏற்பட்டால், இந்த நடவடிக்கையில் ஜனாதிபதி இறங்குவார் எனவும் அந்த செய்தியில் கூறப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற ஆளுங்கட்சிக் கூட்டத்தை மொட்டு கட்சியின் மாவட்டத் தலைவர்கள் புறக்கணித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 15.06.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.